# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 11 செவ்வாய்க்கிழமை [27-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:208


## சிப்பாய், கான்ஸ்டபிள் உட்பட 8பேர் வவுனியாவில் நேற்று சூட்டுக்குப் பலி!

### ஓட்டோவில் வந்தோர் சரமாரியாக வேட்டு

வவுனியா, ஜூலை 27

வவுனியா நகரில்—அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில்—நேற்று நண்பகல் 1. 30 மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் சிப்பாய், பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட எட்டுப்பேர் பலியாகினர், ஆறுபேர் காயமடைந்தனர்.

பொலீஸ் விடுதி, இராணுவ தலைமை முகாம் மற்றும் படையினரின் தங்குமிடங்கள் அமைந்துள்ள பாதுகாப்பு வலயப் பகுதியில்—ரம்மியாஸ் முகாமுக்குச் சற்றுத் தொலைவில்—கண்டி வீதியில் — இத் தாக்குதல் இடம்பெற்றிருக்கிறது.

தோணிக்கல் பகுதியில் இருந்து வந்ததாகக் கூறப்படும் ஓட்டோ ஒன்றில் காணப்பட்ட மூவர் அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மற்றும் பொலீஸார் மீது சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுத் தப்பிவிட்டனர்.

இதனால் அந்தப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த சிப்பாய் ஒருவரும், றிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் அந்தப் பகுதியில் காணப்பட்ட பொதுமக்களில் 6 பேரும் சூட்டுக்கு இரையாகினர்.

பொதுமக்களில் நால்வர் அந்த இடத்திலும், இருவர் வவுனியா ஆஸ்பத்திரியிலும் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. இவர்களில் கூமாங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### சுண்டுக்குளி தேவாலயப் பகுதியில் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். சுண்டுக்குளிப்பகுதியில்—ஆஸ்பத்திரி வீதியில் அமைந்திருக்கும் யுவானியார் தேவாலயத்தின் அருகில் இருந்து வெடிக்காத குண்டு ஒன்று படையினரால் மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை 6.15 மணிக்கு வீதித்துப் பரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினரே ஆலயத்தின் மணிக் கோபுரத்தின் கீழ்ப்பகுதியில் குண்டு இருந்ததைக் கண்டு பிடித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சம்பவத்தை அடுத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு பாதை திறக்கக் கோரி நடத்தப்பட்ட பல்கலை. மாணவரின் பேரணியை படையினர் தடுத்து நிறுத்தினர்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்துக்குப் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறக்கக் கோரி யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களும் திரண்டு நேற்று நண்பகல் நடத்திய அமைதிப் பேரணி இடைநடுவில் படையினராலும் பொலீஸாராலும் தடுத்து நிறுத்தப்பட்டது.

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும் இடையில் பாதை ஒன்றைத் திறந்து — பாதைத் தடையால் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் பட்டினிச்சாவை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### முறைப்பாடு பதிய பொலீஸ் குழு வருகை

யாழ்ப்பாணம், ஜூலை 27

செம்மணி அரியாலைப் பகுதியில் 1996 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அதே வருடம் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்காககொழும்பில் இருந்து குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் யாழ்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிருபைராஜாவின் இறுதிச் சடங்கு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 27

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமான புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், யாழ். மாநகர சபை உறுப்பினருமான செல்லையா கிருபைராஜாவின் இறுதி அஞ்சலி நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அவரது உடல் நேற்று முன்தினம் வவுனியாவில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்தது. பின்னர் நேற்று மு. ப. 11 மணியளவில் விமானம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டு யாழ். ஆஸ்பத்திரி வீதியில்

(10ஆம் பக்கம் பார்க்க)

### ஆசிரியர்கள் மறியலினால்

## மாகாண கல்வி அமைச்சு பணிகள் நேற்று ஸ்தம்பிதம்

### போராட்டம் இன்றும் தொடரும்

திருகோணமலை, ஜூலை 27

திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகம் மற்றும் மாகாண கல்வித் திணைக்களம் நிதி அமைச்சு போன்றவற்றின் முன்பாக நேற்று நடத்தப்பட்ட மறியல் போராட்டத்தினால் இந்த அலுவலகங்களின் பணிகள் நேற்று ஸ்தம்

(10ஆம் பக்கம் பார்க்க))

### மன்னார் மர்மக் கொலைகள்:

## 3 அதிகாரிகள், 11 சிப்பாய்கள் இராணுவப் பொலீஸாரால் கைது!

வவுனியா, ஜூலை 27

மன்னாரில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மர்மக் கொலைகள் மற்றும் பொது மக்கள் மீதான துன்புறுத்தல்கள் குறித்து விசாரணை நடத்திவரும் இராணுவப் பொலீஸ் குழுவினர் நேற்று சனிவிலேஜ் பகுதியைச் சேர்ந்த 3 இராணுவ அதிகாரிகளையும் ஒரு பொலீஸ் சார்ஜண்டையும், 11 சிப்பாய்களையும் கைதுசெய்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து நேற்று மன்னாருக்குச் சென்ற மேற்படி பொலீஸ் குழுவினர் இவர்களைக் கைதுசெய்து வவுனியாவுக்கு அழைத்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பள்ளிமுனைப்

(10ஆம் பக்கம் பார்க்க)

### இடர்காலக் கொடுப்பனவில்

## அம்பாறை ஆசிரியருக்கு முன்னுரிமை; நியாயப்படுத்தி டக்ளஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்கள், அதிபர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு நிலுவைகளை வழங்குவதற்கென ஒதுக்கப்பட்ட 15 கோடிரூபா நிதியில்இருந்து—அம்பாறை மாவட்ட அதிபர், ஆசிரியர்களுக்கு முழு நிலுவையையும் வழங்குவது என்றும், அதற்குப்பின் எஞ்சிய நிதியை வடக்கு— கிழக்கின் ஏனைய அதிபர், ஆசிரியர்களுக்கு பங்கிட்டு நிலுவையின் ஒரு பகுதியை வழங்குவது என்றும் எடுக்கப்பட்ட முடிவால்—

வடக்கு — கிழக்கு தமிழர் ஆசிரியர்கள் அதிருப்தியும் விசனமும் சீற்றமும் அடைந்திருப்பது தெரிந்ததே.

எடுக்கப்பட்ட முடிவை நியாயப்படுத்தும் வகையிலான அறிக்கை ஒன்றை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ. பி. டி. பியின்) சார்பில் அதன் செயலாளர் நாயகமும் எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டிருக்கின்றார். அவர் அதில் தெரிவித்திருப்பதாவது :-

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை நகரில் பாதுகாப்புத் தீவிரம்

திருகோணமலை, ஜூலை 27

திருகோணமலைத் துறைமுக புதிய இறங்குதுறையில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற பயணிகள் கப்பல் மீதான குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து திருகோணமலை நகரப்பகுதியில் நேற்றைய தினம் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்ததாகதிருமலைச் செய்திகள் தெரிவித்தன.

முக்கிய சந்திகளில் நின்ற பொலீஸாரும், இராணுவத்தினரும் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை—

நகரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனைவரும் பொலீஸ் பதிவுச் சான்றிதழ்களை உடனடியாகப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும்எனபொலீஸார் உத்தரவிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 27 யாழ். பல்கலைக்கழக உடற் கல்வித் துறை முதலாம்வருட பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் உடற்கல்வித்துறை அலுவலகத்தில் வைத்து இன்று முதல் வழங்கப்பட வுள்ளன. (ஐ-5)

★ ★ ★

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியின் கணனிப் பிரிவுத் திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெறவுள்ளது வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா தணிகாசலம்பிள்ளை கணனிப் பிரிவை திறந்து வைப்பார்.

# மஹோற்சவம்

அனலைதீவு நயினாகுளம் ஹரிஹரபுத்திர ஐயனார் தேவஸ்தான மஹோற்சவ தேர் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமையும் தீர்த்த உற்சவம் நாளையும் நடைபெறும். [ஐ-117]

# ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27 2000 ஆண்டு ஜி. சீ. ஈ. (உ/த) மாணவர்களுக்கு உயிரியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை இருபாலையில் அமைந்துள்ள தொண்டமானாறு வெளிக்கள நிலையக் கலையரங்கில் நடைபெறும்.


## கண்ணீர் அஞ்சலி



## செல்லையா கிருபைராஜா

எமது கல்லூரியின்
ஆரம்பக் கல்வி அபிவிருத்திச் சபையின் செயலாளரும்
யாழ். மாநகர சபையின் உறுப்பினரும்
புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான

## அமரர் செல்லையா கிருபைராஜா

அவர்களின் இழப்பு எமக்கு ஈடுசெய்ய முடியாத ஒன்று. அன்னாரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் குறிப்பாக எமது மாணவன்

**உமாபிரியன்**

அவர்களுக்கும் அமரரது தாபனத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

– யாழ். மத்திய கல்லூரிச் சமூகம்.

(சி/8317)


# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் சித்திரவேல்

**(ஏ.ஏ. ஆனந்தன்) நாதஸ்வர வித்துவான்**

மட்டுநகரைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு புங்குடுதீவை வசிப்பிடமாகவும் கொண்ட சித்திரவேல் (ஆனந்தன்) அவர்கள் 25-07-99 அன்று இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பிரபல நாதஸ்வரவித்துவான் காளீஸ்வரன் மனோன்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஞானம்பாளின் அருமைக் கணவரும் நாகேஸ்வரன் (கொழும்பு), விக்கினேஸ்வரன் (நயினாதீவு), சுஜாத்தா (இந்தியா), சுசிபந்தன் (நயின தீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபா (கொழும்பு), அருள்மணி (நயினாதீவு) காலஞ்சென்ற தவில் வித்துவான் K. சங்கர் (இந்தியா), வனிதா (நயினாதீவு) ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கரேஸ்வரி, நாராயணசாமி ஆகியோரின் சகோதரரும் பவித்திரா கிர்த்தனா, அரிகரசுதன், றெட்நாங்கி, வினோத், துசிபா நிவேதிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26-07-99 அன்று கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
விக்கினேஸ்வரன் (விக்கி)
சுசியந்தன் (பாபு),
(மக்கள்)

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(67751)

## திருமதி இராஜலட்சுமி வைத்திலிங்கம்

[ஓய்வுபெற்ற உப அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஓய்வுபெற்ற அதிபர், சாவகச்சேரி இந்து மகளிர்கல்லூரி]

வட்டுக்கோட்டை மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் 79/1, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜலட்சுமி வைத்திலிங்கம் 26-07-99 பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏடின் வைத்திலிங்கத்தின் (ஓய்வுபெற்ற அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு., திருமதி மெத்தைவீட்டு நடராஜா (சிறாப்பர்) ஆகியோரின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முருகேசு (கட்டட ஒப்பந்தகாரர், சிங்கப்பூர்) ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 27-7-99 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், பழைய மாணவர்கள், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
ச. சண்முகராஜா
(மைத்துனர்)

இல. 1, சீனியர் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(67761)

## UNIVERSITY OF JAFFNA

### TENDER NOTICE

**AIR CONDITIONERS FOR THE COMPUTER LAB**

Sealed Tenders are invited for the supply and installation of Air Conditioners to the Computer Leb of the Faculty of Management Studies and Commerce, University ef Jaffna upto 2-00p.m on 12-08-99. Tenderers are requested to submit the Tenders to the Bursar, University of Jaffna, Thirunelvely by Registered Post or may be brought by hand and deposit in the Tender Box in the Bursar's office with a mark "Tender for the Supply and Installation af Air Conditioners" on tbe top left hand corner of the envelop.

The Tenderers are requested to inspect tha Lab and submit the tenders and no Tender forms will be issued by the University of Jaffna

A non-refundable Tender fee of Rs. 500/- should be paid at the Finance Branch. University of Jaffna or to Account No. 90501 at People's Bank, University Branch in cash and the receipt should be annexed to the Tender documents.

**Registrar**
University of Jaffna.

(C, 8315)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று
முன்னணி
நடிகர் – நடிகைகளின்
**சுயம்வரம்**
(புதிய வெளியீடு)
நேரம்; 10-30, 2-30
(67708)

## ராஜா

யாழ்ப்பாணம்
பிரபுதேவா - கஜோல்
மற்றும் பலர் நடித்த
**மின்சாரக் கனவு**
10-30, 2-30,
[சி/8282]

## நாகம்ஸ்

சுன்னாகம்
ரஜனி - குஷ்பு – ஜனகராஜ்
நடித்த
**பாண்டியன்**
காட்சிகள் 11.00 2.30
(புதிய நேரம்)
[illegible]


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்
நடத்தும்

## முழு நிலா நாள் கருத்தரங்கு

இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம்; நாளை 28-07-1999 புதன்கிழமை
பிற்பகல் 3.30 மணி (புதிய நேரம்)

**"காஷ்மீர் பிரச்சினைகளும் அதன் அண்மைக்காலத் தாக்கங்களும்"**
பேராசிரியர் ச. சத்தியசீலன்
(வரலாற்றுத்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)

**"இந்திய — பாகிஸ்தான் எல்லைக் கட்டுப் பாட்டுக் கோடும் அச்சூழலின் புவியியற் பின்னணியும்"**
திரு. A. சூசை ஆனந்தன்
(முதுநிலை விரிவுரையாளர், புவியியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்)

தலைமை: திரு. க. சி. குகதாசன்
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

அனைவரும் வருக!

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.


ஆதரவு;
**போஸ்கோ**
இல. 3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(சி/8319)


## சிறுவர் தினம் 1999

உலக சிறுவர் தினத்தையொட்டி அரங்கச் செயற்பாட்டுக் குழுவினால் நடத்தப்படும்:

- சிறுவர் நாடக ஆற்றுகைப் போட்டி
- சிறுவர் நாடக எழுத்துருவாக்கப் போட்டி
- சிறுவர் நாடக தயாரிப்பு தொடர்பான களப்பயிற்சிகளும் கருத்தரங்குகளும்

### விடயம்

**சிறுவர்களின் உளநல மேம்பாடு**

- சிறுவர் நாடக ஆற்றுகை போட்டி
- நடிகர்கள் 12 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்,

நேரம்: 30 நிமிடம்

பரிசில்கள்:
1) **5000/-** 2) **3000/-** 3) **2000/-**

தகுதியான 10 நாடகங்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

- செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் நடைபெறும்.
- சிறுவர் நாடக எழுத்துருவாக்கப் போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கு வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.
- எழுத்துரு சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- எழுத்துருவாக்கம் செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முதல் எமக்கு அனுப்பப்படல் வேண்டும்.

நேரம்: 30 - 45 நிமிடம்

பரிசில்கள்:
1) **2000/-** 2) **1500/-** 3) **1000/-**

தரமான ஐந்து நாடக எழுத்துருக்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- நாடக களப்பயிற்சிகளும் கருத்தரங்குகளும்.
- பங்குபற்றுபவர்கள 18 - 40 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்,
- 3 நாட்கள் நடைபெறும்.
- ஆர்வம் உள்ளவர்கள் பங்குபற்றலாம்.
- பங்குபற்றுபவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- ஓகஸ்ட் மாதம் நடுப்பகுதியில் 3 நாள்கள் நடைபெறும்.

மேற்குறிப்பிட்டவற்றில் பங்குபற்றுபவர்கள் 10-08-99க்கு முன் எம்முடன் தொடர்பு கொண்டு ரூபா 50/- ஐக் கட்டிப் பதிவினைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

19, பழம் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(67760)

அரங்கச் செயற்பாட்டுக் குழு
யாழ்ப்பாணம்
பதிவு இல: HA/8/TA/9/67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக லாகூரில் ஆர்ப்பாட்டம்

## ஊடுருவல்காரர்கள் வாபஸ்க்கு எதிர்ப்பு

கார்கில் பகுதியில் இருந்து பாகிஸ்தான் ஆதரவு ஊடுருவல் காரர்களை பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் விலக்கிக் கொண்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக லாகூரில் நேற்று முன்தினம் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பாகிஸ்தானியர் பிரதமர் ஷெரீப்புக்கும் அமெரிக்காவுக்கும் எதிரான கோஷங்களை எழுப்பிய வண்ணம் லாகூர் வீதிகள் ஊடாக அணிவகுத்துச்சென்றனர்.

பாகிஸ்தானின் மத அடிப்படைவாத எதிர்க் கட்சியான ஜமாத்கி இஸ்லாமியக் கட்சியே இந்தப் பேரணிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

'நாட்டைக் காட்டிக் கொடுத்த பிரதமர் ஷெரீப் பதவி விலக வேண்டும் என்றும்—

ஷெரீப் அமெரிக்காவின் நெருக்குதலுக்கு அடி பணிந்து விட்டார் எனவும்—

பேரணிக்குப் பின் நடைபெற்ற கூட்டத்தில் ஜமாத்தி இஸ்லாமியக் கட்சியின் தலைவர் குற்றஞ் சாட்டினார்.

ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து லாகூர் நகரப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பாகிஸ்தான் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து இதுவரை அங்கு நடத்தப்பட்ட பல்வேறு ஆர்ப்பாட்டங்களில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டமே மிகப் பெரியது என அவதானிகள் தெரிவித்தனர். (இ-க-7)

# கிளின்ரனுக்கு அளித்த வாக்குறுதியை பாகிஸ்தான் காப்பாற்றுதல் வேண்டும்

## ஆல்பிரைட் கோரிக்கை

இஸ்லாமாபாத், ஜூலை 27

பாகிஸ்தான் — இந்திய எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அப்பால் இருந்தும் ஜம்மு — காஷ்மீரின் அண்மித்த இடங்களில் இருந்தும் பாகிஸ்தான் தனது இராணுவத்தினரையும் ஊடுருவல் காரர்களையும் விலக்கிக் கொள்வதன் மூலம் அமெரிக்க அதிபர் கிளின்ரனுக்குக் கொடுத்த வாக்குறுதியைப் பாகிஸ்தான் காப்பாற்ற வேண்டும் என அமெரிக்க வெளியுறவுச் செயலர் மெடலின் ஆல்பிரைட் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சிங்கப்பூரில் செய்தியாளர்களிடம் பேசும் போது ஆல்பிரைட் இதனைத் தெரிவித்தார்.

ஆசியான் வட்டார மன்றக் கூட்டம் நேற்று முன்தினம் சிங்கப்பூரில் ஆரம்பமாகியது. அதில் கலந்து கொள்வதற்கு ஆல்பிரைட் சிங்கப்பூர் வந்துள்ளார்.

இதேவேளை— இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங்கும் ஆல்பிரைட்டும் கார்கில் நிலைமை குறித்து கலந்துரையாடினர்.

ஜம்மு காஷ்மீர் பகுதியில் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தூண்டிவிடும் செயல்களை பாகிஸ்தான் நிறுத்திக் கொண்டாலேயே பாகிஸ்தானுடனான பேச்சுக்கள்

உலக அரங்கில்

நடைபெறும் எனவும் —

லாகூர் பிரகடனத்துக்கு ஏற்படுத்தப்பட்ட சேதத்தை சீர்படுத்த உறுதியான நடவடிக்கைகளை பாகிஸ்தான் மேற்கொள்ளவேண்டும் எனவும் ஜஸ்வந் சிங் ஆல்பிரைட்டிடம் தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீர் பிரச்சினைக்கு மூன்றாந் தரப்பு மத்தியஸ்தம் தேவை இல்லை என இந்தியா தெரிவித்துள்ளதைத் தாம் ஏற்றுக்கொண்டதாக ஆல்பிரைட் கூறினார்.

அணு ஆயுதத் தடைஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுவதுபற்றி ஆல்பிரைட்ஜஸ்வந்சிங்கிடம் கேட்டபோது, வரும் செப்ரெம்பர் மாதம் தேர்தல்கள் நடைபெற இருப்பதால் அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாது என வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

கார்கில் ஊடுருவல்களுக்குப் பின் பாகிஸ்தானை நம்ப முடியாதுள்ளது. எனவே இந்திய பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதி முழுவதிலும் நிரந்தரக் கண்காணிப்புப் பணி நடைபெறும் என்றும்—

கார்கில் பகுதியில் உள்ள 147 கிலோ மீற்றர் தூர எல்லைக் கட்டுப் பாட்டுக் கோட்டுப் பகுதியில் உள்ள முக்கியமான இடங்களைக் கண்டறியும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும்— அந்த இடங்கள் இராணுவத்தால் ஆண்டு முழுவதும் கண்காணிக்கப்படும் எனவும் — பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் தெரிவித்தார். (இ—க)

# பொலீஸ்தாக்குதலுக்கு பயந்து ஆற்றில் குதித்தோரில் 18பேரின் சடலங்கள் மீட்பு

திருநெல்வேலி, ஜூலை 27

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகம் முன்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை தமிழ் மாநிலக் காங்கிரஸ் மற்றும் புதிய தமிழகம் கட்சி ஆகியன இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டங்களின்போது இடம்பெற்ற பொலீஸாரின் தாக்குதலுக்கு அஞ்சி ஆற்றில் பாய்ந்தவர்களில் 18 பேரின் சடலங்கள் நேற்று வரை மீட்கப்பட்டுள்ளன.

மாஞ்சோலை தேயிலைத் தோட்டப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கையைக் கண்டிக்கும் வகையில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்தப் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம், அடிதடி நடத்தினர்.

பொலீஸாரின் இந்தத் தாக்குதலுக்கு அஞ்சி ஓடிய பலர் அருகில் உள்ள தாமிரபரணீ ஆற்றுக்குள் குதித்தனர்.

உயிரைக் காப்பாற்ற ஆற்றில் குதித்தவர்களில் பலர் கரைசேர்ந்து விட்டனர். ஆற்றில் குதித்துக் காணாமற் போனவர்களில் நேற்று வரை 18 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள தமிழ் மாநில காங்கிரஸ் இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு தமிழக அரசைக் கேட்டுள்ளது. [இ-3-க]

# ஒஸாமா பின் லேடனைப் பிடிக்க பாகிஸ்தானில் அமெரிக்கப் படை?

## அந்நாட்டு அமைச்சர் மறுக்கிறார்

இஸ்லாமாபாத், ஜூலை 27

சவுதிக் கோடீஸ்வரர் ஒஸாமா பின் லேடனுக்கு எதிராக பாகிஸ்தானில் இருந்து நடவடிக்கை எடுப்பதற்கு எவரையும் அனுமதிக்கப் போவதில்லை; ஆப்கானிஸ்தானில் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் லேடனைக் கைது செய்யும் நடவடிக்கையில் பாகிஸ்தான் சம்பந்தப்படவுமில்லை என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் தெரிவித்துளார்.

ஆப்கானிஸ்தானில் இருந்து ஒஸாமா பின்லேடனை வெளியேற்றும் படி அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை தலிபான் மக்கள் படை நிராகரித்து விட்டதால் பின் லேடனுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கும் முகமாக அமெரிக்க கொமாண்டோக்கள் பாகிஸ்தானில் உள்ளனர் — என்று பாகிஸ்தான் பத்திரிகைகளில் வெளியான செய்தியை அடுத்தே பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் இந்தக்கருத்தினை வெளியிட்டார். (ஐ-க)

# பாக். அணுஆயுதத் திட்டத்துக்கு உதவும் முக்கிய பொருள்கள்

## பிரிட்டனில் சிக்கின

இஸ்லாமாபாத், ஜூலை 27

பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டத்துக்கு உதவ எடுத்துச் செல்லப்பட்ட முக்கியமான பொருள்களை பிரிட்டிஷ் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அமெரிக்காவில் இருந்து பிரிட்டனில் உள்ள ஹென் என்ற இடத்துக்கு இந்தப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டபோது கைப்பற்றப்பட்டன

இந்தப் பொருள்கள் டுபாய்க்கு எடுத்துச் செல்லப்பட வேண்டியவை என்பது கைப்பற்றப்பட்ட ஆவணங்களில் இருந்து தெரியவருவதாகவும் ஆனாலும் இப்பொருள்கள் இறுதியாகப் பாகிஸ்தானையே சென்றடைய இலக்கு வைக்கப்பட்டதாகவும் பிரிட்டிஷ் உளவுத்துறையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (இ-க)

# மிகப் பெரிய விபசார விடுதி டாக்காவில் மூடப்பட்டது!

டாக்கா, ஜூலை 27

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் மிகவும் பழமை வாய்ந்ததும் மிகப் பெரியதுமான விபசார விடுதி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மூடப்பட்டது.

பல நூற்றுக் கணக்கான பொலீஸார் வெள்ளிக்கிழமை அதிகாலை மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாகவே விடுதி மூடப்பட்டது.

டாக்காவின் புறநகர்ப் பகுதி பஜாரில் உள்ள இந்த விபச்சார விடுதியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

மேற்படி விடுதியை மூட அரசு திட்டமிட்ட போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்மையில் இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விபசாரம் சட்ட பூர்வமாக உள்ள முஸ்லிம் நாடுகளில் பங்களாதேஷும் ஒன்றாகும். (க-9)


## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் கோ. நிவேதன்

27 – 07 – 1999

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட

கோபாலகிருஷ்ணன் – ஸ்ரீரஞ்சினி

தம்பதிகளின் செல்வப் புதல்வன்

நிவேதன்

தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று சுவிஸில் கொண்டாடுகிறார். நிவேதனை அப்பம்மா, சுவிஸ் சித்தப்பா, பெரியப்பா குடும்பம், அத்தைமார், பெரியத்தை மாமா, சின்னத்தை நீர்வேலியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, அன்ரிமார், சுவிஸ்மாமா, பெரியமாமா, அத்தை, திசானி மச்சள், கிட்டு அப்பா குடும்பம், லண்டன் அப்பப்பா, அம்மம்மா, ரகுலன், நிறோ, நிசானி அன்ரி மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் நல்லைக் கந்தன் அருளால் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இராசையா தவமணி

வீரபத்திரர் வீதி,
மணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி/ 8313)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயதுடைய வாலிபனுக்கு (நட்சத்திரம் கார்த்திகை) படித்த தகுதியான மணமகள் தேவை. விளம்பர இல. 918, மே/பா உதயன். [67732]

### விற்பனைக்கு

றச், ஹீரோ துவிச்சக்கர வண்டிகள், உருக்கு அலுமாரிகள், மரத்துண்டுகள், யன்னல் கிறில்கள், வான் சைக்கிள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 57, றக்கா ஒழுங்கை, யாழ்ப்பாணம். [67722]

### பொருளியல்

1999 A/L பரீட்சைக்கான நடைமுறை விடயங்கள், அபிவிருத்திக் கொள்கைகள், பேரினப் பொருளாதாரம்- வெளிவாரி விளைவுகள், சர்வதேச வர்த்தகம், வர்த்தக மாற்று வீதம் ஆகிய நூல்கள் யாழ்ப்பாண நகர புத்தக சாலைகளில் விற்பனையாகின்றன. ஆசிரியர் வே. கருணாகரன். [67632]

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் வலிகாமத்தில் நடந்ததைக் கூறுகின்ற ஒரே ஒரு நூல். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியது வாங்கி வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவினர்களுக்கும் அனுப்புங்கள். ரூபா 50. [67700]

### தவறிவிட்டது

ஜெயசுந்தரம் குணச்சந்திரன் என்பவரது விசேட அ. அட்டை (0907026177) 24-07-99 இல் தாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுபாஸ் வீடியோ, தாவடிச் சந்தி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். [67741]

### படிவம்

சகல வகுப்புகளுக்குமான பாடசாலை மட்டக் கணிப்பீட்டுப் படிவங்கள் விற்பனையாகின்றன. படிவம் ஒன்று 55 சதம் பாரதி இல. 430, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி, 3081. (சி/8298)

### O/L MATHS 99

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்திப்புள்ளியடையாதவர்களுக்கும் 34 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distimction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். [தூர உள்ளவர்களுக்கு 20 நாள்களில் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன் இல. 10, கச்சேரி கிழக்கு, ஒழுங்கை, சுண்டுக்குழி. (67734)

## கூட்டம் இன்று

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வட்டுக்கோட்டை கிளையின் புனரமைப்புக் கூட்டம் இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று செவ்வாய் பிற்பகல் 1.30 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் சங்கத்தின் தலைவர் சி. தார்சீசியஸ் தலைமையில் கூட்டம் நடைபெற உள்ளது. [இ]

# பளைப் பகுதியில் 40 குடும்பங்களுக்கு லியோ ஏற்பாட்டில் திருமணப் பதிவு

தென்மராட்சி, ஜூலை 27

பளைப் பிரதேசத்தில் திருமணப் பதிவு செய்து கொள்ளாத நாற்பது குடும்பங்களுக்கு கடந்த 22 ஆம் திகதி இலவச திருமணப் பதிவு செய்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர லியோ கழகத்தினரின் ஏற்பாட்டின் பிரகாரம் கழகத்தில் பதிவு செய்தோரில் முதற்கட்டமாக நாற்பது குடும்பங்களுக்கு திருமணப் பதிவு செய்யப்பட்டதாக சாவகச்சேரி லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் வி. வி. மகாலிங்கம் தெரிவித்தார்.

இரண்டாம், மூன்றாம் கட்ட இலவச திருமணப் பதிவுகள் ஓகஸ்ட் மாதத்தில் மேற்கொள்ளவிருப்பதால் இதுவரை திருமணப் பதிவுகள் மேற்கொள்ளாத பளைப் பிரதேச மக்கள் பளைப் பிரதேச சபை அலுவலகத்தில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-117)

## இல்ல விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கைதடி கிழக்கு கலைநகர் அறவழி மழலைகள் கல்விப் பூங்கா மாணவர்களின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்விப்பூங்கா மைதானத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு வளர்ச்சிக் குழுத்தலைவர் திருமதி ச. தயாளினி தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக நவபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் வே. பாலசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (இ)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் பாடசாலையின் அதிபர்
திருமதி சந்திரா பத்மபாலன்
அவர்களின் அன்புத் தந்தையார்
முன்னாள் அதிபர்

### சா. பொ. அழகரத்தினம்

அவர்கள் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அவரின் பிரிவால் துயருறும் மக்கள், மருமக்கள், சுற்றத்தாருக்கு எமது இதயம் நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் மலர்களால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

ஆசிரியர்கள்,
பணியாளர்கள், மாணவர்கள்,

நவீஸ்ட் பாடசாலை,
கைதடி.

(சி/8316)

## யா/ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும்

# பாராட்டு விழா



விஞ்ஞான கலாநிதி

### திரு. க. பாலசுப்பிரமணியம்

(B. Sc. (Cey) Ph. D. (Indiana, U.S.A.) Hony, D. Sc. (Jaf), F. N. A. S (SL) F. I. Chem. (Cey), C. Chemist, F. I. Biol (SL)

காலம்: 28 – 07 – 1999 புதன்கிழமை
மு. ப. 8.30 மணி

இடம்: அன்ரன் இராஜநாயகம் மண்டபம்

தலைவர்: வண. பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் (அதிபர்)

### நிகழ்வுகள்

- விழா நாயகனை ஊர்வலமாக அழைத்தல்
- புனித அன்னாள் ஆலயத்தில் நன்றிப்பலி
- மங்கள விளக்கேற்றல்
- கொடியேற்றலும் பாடசாலைக் கீதமும்
- வரவேற்பு நடனம் (மாணவிகள், இளவாலை கன்னியர்மடம்)
- வரவேற்புரை திரு. அ. பேரம்பலம் (பழைய மாணவர் சங்க உப தலைவர்)
- தலைமையுரை
- ஆசியுரை; பங்குத்தந்தை C. J. அன்ரனிபாலா

பாராட்டுரைகள்

(1) திரு. அ. தம்பிப்பிள்ளை [ஓய்வு பெற்ற அதிபர்]
(2) திரு. பு. ரவிராஜன் [விரிவுரையாளர், பௌதிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்]
(3) திருமதி றெஜினா இருதயநாதன் [பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்]
(4) வைத்திய கலாநிதி இராஜேந்திரப்பிரசாத் [மருத்துவபீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்]
(5) பேராசிரியர் C. சிவஞானசுந்தரம் [முன்னாள் மருத்துவ பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்]

- வாழ்த்துப்பா வழங்கல்: திரு. பு. ஆ. செபஸ்ரியாம்பிள்ளை (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல், திரு வை. சண்முகம் (ஓய்வுபெற்ற பிரதம இலிகிதர்)
- பட்டையம் வழங்கல்: டாக்டர் அ. செல்வராஜா (பழைய மாணவர் சங்க உபதலைவர்)
- பதிலுரை: விழா நாயகன்
- நன்றியுரை: திரு A. J. சவுந்தரநாயகம் (சந்திரன்) (செயலாளர், பழைய மாணவர் சங்கம்)

**பழைய மாணவர் சங்கம்**
புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

(67750)

# இதய அஞ்சலி



தோற்றம் 04 – 08 – 1952

மறைவு 23 – 07 – 1999

தமிழ்பேசும் மக்களின் விடிவிற்காக பொது வாழ்வில் ஈடுபட்டு உயிர்நீத்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் யாழ். மாநகரசபை உறுப்பினருமான

தோழர் **செ. கிருபைராஜா** அவர்களுக்கு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் எமது அஞ்சலியையும் அவரது கட்சியைச் சார்ந்தவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஈழமக்கள்
புரட்சிகர விடுதலை முன்னணி
(ஈ. பி. ஆர். எல். எவ்)**

[67749]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

வேலணை

கே. தவமணிதேவி (11028 ஏ), என். சிவலிங்கம் (11324 ஏ)), எஸ். சிவதர்சினி(11324 பீ), எம். சிதம்பரப்பிள்ளை (11326ஏ), என். கருணானந்த சிவம் (11326 பீ), எஸ். குமாரசாமி (11330 ஏ), எஸ். கனகரட்ணம் (11363 பீ), ரீ. சுதாகரன் (11374 ஏ), எஸ். சின்னத்தம்பி (11376), பீ. ஜெசதீஸ்வரி (11390 ஏ), ரீ பிறேம்கனி (11395), ஐ. வனஜா (11396 ஏ), ஐ. ரூபிகா (11396 பீ), என். சிவப்பிரகாசம் (11398 ஏ), எஸ். விஜயகௌரி (11398 பீ), எஸ். கலைச் செல்வி (11398 சீ), எஸ். விஜயரட்ணம் (11398 டீ), எஸ். நல்லையா (11403 ஏ), பீ. தனலச்சுமி (11404 ஏ), கே. முத்துக்குமார், (11405 ஏ), எம். நாகேஸ்வரி (11405 பீ), பீ. கருணாகரன் (11406 ஏ), பீ. நல்லையா (11410 ஏ).

எஸ். லாவண்யா (11412 ஏ), எஸ். சத்தியராஜன் (11412பீ), கே. மகேஸ்வரன் (11414சீ), எம். எலக்சன் (11414டீ), எம். பரமலிங்கம் (11421ஏ), பீ. கிருத்தியன்(11421பீ), எம். இளையதம்பி (11426ஏ), எம். கமலாம்பிகை (11426பீ), எஸ். பிரபாகரன் (11426சீ), எஸ். சாந்தினி (11426டீ), எஸ். தங்கமுத்து (11427ஏ),

எஸ்.சோமசுந்தரம்(11427 பீ), எஸ் கதிரவேலு (11427 சீ), பீ. ஞானம்மா (11437 ஏ), ஆர். கே. நிரோதினி (11437பீ), எஸ். பொன்னையா (11444ஏ), எஸ். செம்மனச்செல்வி (11444பீ) கே. அன்னமுத்து (11444சீ), ரீ. விக்னேஸ்வரன் (11469 ஏ), எஸ். சுப்ரமணியம் (11479ஏ), ஆர். தயாராசா (11496ஏ),

கே. யோகம்மா (11499 ஏ), வை பேரின்பபதி (11499பீ), எஸ். தர்மலிங்கம் (11500ஏ), ரீ. மகேஸ்வரி (11500பீ), எஸ். சந்திரசேகரம் (11501ஏ), எஸ். பிரபாகரன் (11502ஏ), எஸ். சிவதர்சினி (11502பீ), பீ. விஜிந்தன் (11502சீ), ஏ. ஜெயச்சந்திரன் (11507ஏ), எஸ். மகாலக்சுமி (11517ஏ).

ரீ குணநாயகம் (11519 ஏ), ரீ. பொன்னம்பலம் (11520ஏ), கே. சபாநாதன் (11520பீ), ரீ. ரட்ணம் (11522ஏ), ஆர். மாலினிதேவி (11526ஏ), எஸ். இரட்ணசபாபதி (11529ஏ), பீ. ஞானம்மா (11537ஏ), எம். முத்துமன் (11555ஏ,) எம். எம். யசீர்அரபாத் (11555பீ).

எம் ஞானரத்னம் (11556 ஏ), யீ. நிரஞ்சன் (11556பீ), கே. கண்மணிப்பிள்ளை (11569 ஏ), ஆர். வசந்தரூபி (11577ஏ), ஆர். சர்மிலி (11577 பீ), ஆர். குணாளன் (11577சீ), கே. அமராவதி (11578 ஏ), கே. லோகநாதன் (11591 பீ), எம். மனோன்மணி (11594 ஏ).

எம். சிவகாந்தசுந்தரி (11595 ஏ), கே. இந்திராணி (11597 ஏ), வீ. பரமநாதன் (11600ஏ), வீ. பரமநாதன் (11600பீ), கே. பரமேஸ்வரன் (11602ஏ), கே. பரமேஸ்வரன் (11605ஏ). பீ. ராஜேஸ்வரி (11605 பீ), கே. நாகநந்தி (11607ஏ)' ரீ. பரமேஸ்வரி (11608 ஏ), ரீ. அருட்செல்வி (11608பீ).

எம். ஜோதீஸ்வரி 11609ஏ) எம் சந்திரகலா (11609பீ), எஸ். சுஜத்தா (11609சீ), ஏ.சுப்பிரமணியம்(11616ஏ). எம் யோகின்பநாதன் (11617 ஏ) பீ. விமலா (11617பீ), பீ. தவராஜா (11617 சீ), பீ. அனுத்தமன் (11617டீ). பீ. காயனன் (11617 ஈ),

பருத்தித்துறை

வீ செம்மனச்செல்வி [086618ஏ], வீ. அன்னம்மா [086618பீ], எல். உமாதேவி ["88004ஏ], சசிதேவி [088004பீ], கே. ராஜகுமாரி (095197ஏ), பீ. கேதீஸ்வரன் [095292ஏ], எஸ் பாமினி [095296ஏ], எஸ். சுகந்தினி [095296பீ], ரீ யோசெப் [098145ஏ], ஆர். ஞானசந்திரன்[098264 ஏ], என். ஞானசந்திரன் (098264பீ), ஏ. கமலாதேவி (100759ஏ), என். நடனசிகாமணி (100843ஏ), எஸ். ராஜமணி (100872ஏ), ஜே. தோமஸ் அன்ரனி (100887 ஏ), ஏ. பிலிப்டமியன் (100887பீ), என். கந்தசாமி [100892ஏ].

பீ செல்வராஜா (100912 ஏ), கே. மங்களேஸ்வரன் (100986 ஏ), என். பேபி புஷ்பராணி (101009 ஏ). என். நவஜீவன் (101009 பீ), எஸ். பத்மநாதன் (101218ஏ, வீ. லூர்த்தம்மா (101222 ஏ), ஞானாம்பிகை (101241 ஏ), எஸ். சிவசுப்ரமணியம் (101241பீ) எஸ். சிவதாசன் (101241 சீ), எஸ் குமார் (101241 டீ), எஸ். தில்லைநாதன் [101248ஏ[, கே. திருப்பதி [102736 ஏ], யீ. அம்பலவாணப்பிள்ளை [102734 ஏ[, கே. சிவயோகன் [102758 ஏ], பீ. திலகவதி [102763 ஏ] கே. சத்திபேந்திரா [102778 ஏ],

ஆர். அருட்செல்வம் (102809ஏ), எம். கோவிந்தராஜ் (102812 ஏ), விஸ்வலிங்கம் (102820ஏ). வீ. தேவனால் [102820பீ], ஏ. சுபேந்திரா [102821ஏ], டீ. யோகனேஷ்ராஜ் [102832ஏ]. கே உமையம்மா [102832பீ], சத்லுனதாஸ் [102845ஏ], ஆர். சாரதாதேவி [102845பீ], வை அனுசியா [102877 ஏ], கே. பெர்னாண்டோ [102878ஏ], எஸ்.கோகிலராஜன் [102892ஏ], கே. நல்லதம்பி [102894ஏ], என். நளினி [102894பீ], என். தவமணி [102894சீ], பீ. பரமநாதன் [102903ஏ], எம். வரத செல்லப்பிள்ளை [102962ஏ], என். நடராசசுந்தரம் [102981ஏ].

எஸ். லீலாவதி (102983 ஏ.) எஸ். நாகராணி(102986 ஏ), ரீ. பாலசிங்கம் (102994 ஏ), எம். தர்மலிங்கம்(103004 ஏ), கே. தியாகராஜா(103005 ஏ), என். ராசலிங்கம்(103006 ஏ), எஸ். ஞானபாக்கியம் (103013 ஏ), எஸ். அன்ரனிஸ் அருந்தாஸ் (103013 பீ), எஸ். உதயதாஸ்(103013சீ), வீ.பரமேஸ்வரி (103018ஏ), கே. தங்கராஜா(103025 ஏ), ரீ. சங்கீதா (103025 பீ), எம். தாரணி (103030 ஏ), ஆர். விஜயகுமாரி (103051 ஏ), ஆர். பரமு (103063 ஏ), ஆர். செல்வரத்னம் (103091 ஏ), ஆர். மஞ்சுளா (103099 பீ), ஆர். ரஜிதா (103099 சீ), ஆர். ரேணுஜா (1030·9 டீ).

எம். சூசைதாசன் (103140 ஏ), எஸ். ஐயங்கரமூர்த்தி (103142ஏ), ஏ ஜெயரஞ்சனி (103145ஏ), மீரா (103149 பீ), வீ ஜெயவிந்தன்(103153 ஏ), எஸ். நந்தினிதேவி (103154ஏ), ஏ. முரளிதரன் (103160), பீ. ஜெயசெல்வன் (103180ஏ), பீ. ஜெயசெல்வன்(103180பீ)

வீ தில்லைநாயகி(103182 ஏ), வீ. தில்லைநாயகி(103182 பீ), ஐ. அருணாசலம்(103197 ஏ), எம். யோகதிலிங்கம் (103198ஏ), என். தர்மராசா (103199ஏ), ராசமலர் (103220ஏ), ஏ. ஆசைய்யா (103220பீ), வீ. ஜீவகொடி (103224ஏ), எஸ். அகிலராஜா(103226ஏ), எம். கமலேஸ்வரன்(105332ஏ),

எஸ். கமலேஸ்வரன் (105332பீ), எஸ். மயில்வாகனம் (105336ஏ), ஏ. பாலுச்சந்திரன் (105354ஏ). கே. மாணிக்கம்(105362ஏ), சில்வபாக்கியம் (105362பீ), கே. விக்னேஸ்வரன்(105362)சீ), எம். ராமசந்திரன் (105394 ஏ), ஆர். ராஜலெட்சுமி (105394பீ), கே. கமலாம்பிகை (105400ஏ), கமலாம்பிகை (105400பீ),

எஸ். சிவகுரு (105401ஏ), சில்வகுரு (105401பீ), ஏ. ராசம்மா (105406ஏ). ஆர். சிறிமதன் (105427ஏ), ஆர். விமதீஸ்வரி(105427பீ), ஆர். ஆர். சிறிமதன் (105427சீ), ஆர். விமதீஸ்வரி (105427 டீ), ஐ. நிர்மலாதேவி (105428ஏ), ஐ. துர்வபகதுர் (105428பீ), எஸ். தனபாலசிங்கம் (105437ஏ), ரீ. யோகேஸ்வரி (105437பீ), ஜே. செபமாலையம்மா (105451ஏ).

ஆர். ராகவன் (103099 ஈ), எஸ். சின்னராஜா (103099 யீ), ஈ. பாலுமைக்கல் (103110 ஏ), ஈ. செல்லபாக்கியம் (103110 பீ), வீ.முத்துசாமி (103122 ஏ), எஸ். சிவகுமார் (103126 ஏ), ஏ. அன்னபூரணம் (103127 ஏ) பீ இந்தபசிலி (103139 ஏ), பீ. ரொபெட் (103139 பீ),. ராஜகுமார் (105451பீ), எஸ். பத்மாவதி (105454ஏ), ஏ. வேலுமைலம் (105462ஏ), என் ஜெயராசா (105511ஏ), கே. தர்மலிங்கம்(105507டீ), என். குகன் (106705ஏ), வீ. வடிவேலு (106725ஏ), எஸ். கமலேஸ்வரி (106761ஏ), எஸ் மன்மதன் (106761பீ), எம். ரவீந்திரன் (106770ஏ), எம். ரவீந்திரன் (10670சீ), ஆர். விஜயசிங்கம்(106785)ஏ என். பஞ்சலிங்கம்(106800ஏ) பீ. பாமினி (106800பீ), பீ. சிபாமாக் (103800சீ).

[தொடரும்]

# பிரதேசசபைகளுக்கான நிதியை ஆணையாளரே தரவேண்டும்

## வலி. தெற்கு பிரதேசசபைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 27

''பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்ளப்படும் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டுத் திட்டங்களுக்கான நிதி உள்ளூராட்சி ஆணையாளரால் நேரடியாக பிரதேச சபைகளுக்கு வழங்கப்படவேண்டும்.''

மேற்கண்டவாறு வலிகாமம் தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தி. மா. செல்வராசா வடக்கு—கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு—கிழக்கு மாகாண சபை பிரதம செயலாளருக்கு அவர் அனுப்பியுள்ள மகஜரிலேயே இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

கடந்த மாதம் 2ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கொழும்பில் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரதேசங்கள் தோறும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான வேலைகளுக்கான நிதியை உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக பிரதேச சபைகளுக்கே வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் மீண்டும் இந்தநிதி தொடர்பாக, சில வேலைத் திட்டங்களின் பெயர் குறிப்பிடப்பட்டு அவற்றுக்கான மதிப்பீடுகள் பிரதேச செயலாளரால் எம்மிடம் கோரப்பட்டுள்ளன. அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் ஏற்கனவே எம்மால் நிறைவேற்றப்பட்டுவிட்டன/ நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனால் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

இலங்கையில் மற்றைய மாகாணங்களில் பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீடுகள் பிரதேச சபைகளுக்கு நேரடியாக ஒதுக்கப்படுகின்றது. ஏன் வடக்கு மாகாணத்தில் மாத்திரம் இப்படி விநோதமான ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன? மேலும், சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் இறுதியில் திட்டங்களைத் தந்து டிசெம்பர் மாதம் இறுதிக்கு முன் முடிக்கும்படி பணித்தார். திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் இத்தனை மாதங்கள் கழிந்தன. பணம்கொடுக்கப்படவில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவருக்கு, பிரதேச செயலர் பணிப்புரை வழங்க முடியாது என்பதை [illegible] களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். இது உள்ளூராட்சி சபையின் ஒதுக்கீடுகள் என்றபடியால் எங்கள் உள்ளூராட்சி ஆணையாளர் மூலமாக அனுப்பினால் மக்கள் தலைவரால் தெரிவு செய்யப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்துவார்.

எனவே இவ்வாறான நிதியினை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக எமக்கு விடுத்துதவும் படி தயவுடன் கேட்டுக் கொள்கிறேன் — என்றுள்ளது. (இ-3)

## முன்பள்ளி விளையாட்டு விழா

நெல்லியடி, ஜூலை 27

துன்னாலை வல்லியானந்தம் சனசமூகநிலைய முன்பள்ளிவிளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வ. சிவானந்த விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் சி. நடராஜலிங்கம், நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் இ. இராஜேந்திரா உட்படப் பலர் கலந்து கொள்வர். [illegible]

### யாழ். கல்வி வலயத்தில்

# குடும்பப் பாடசாலைகளின் இடம் பெயர் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ் கல்வி வலயத்தில் ''குடும்பப் பாடசாலைகளின் இடம் பெயர் சேவை'' ஒன்று நடத்தப்படுகின்றது.

யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் முதலாம் வகுப்பு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இந்த இடம் பெயர் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தரமான, சகல வசதிகளையும் கொண்ட பாடசாலையின் ஆசிரியர்களை அழைத்துச் சென்று பின் தங்கிய, வசதிகள் குறைந்த பாடசாலையின் ஆசிரியர்களுடன் கலந்துரையாட வைக்கும் இந்தத்திட்டம் கடந்தவாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களைக் கொக்குவில் மேற்கு சி. சி. பாடசாலைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள ஆரம்ப வகுப்பு ஆசிரியர்கள், மாணவர்கள் நிலை, வகுப்புக்களின் தரம் ஆகியன தொடர்பாக ஆராயப்பட்டது,

யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை தலைமையிலான கல்வித் திணைக்கள அதிகாரிகள் இந்த இடம் பெயர் சேவையில் கலந்து கொண்டனர்.

நகரப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியைப் பின் தங்கிய பாடசாலைகளுக்கும் அறிமுகப்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட இந்த இடம் பெயர் சேவையின் போது பல விடயங்கள் இனங் காணப்பட்டன.

மாணவர்களின் போஷாக்கற்ற தன்மை, ஆசிரியர்களுக்குப் போதிய வசதி கிடைக்காமை, வகுப்பறைகள் சிறந்த முறையில் அமைக்கப்படாமை போன்ற விடயங்கள் இனங்காணப்பட்டு அவற்றை உடன் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர் நா. தணிகாசலம் பிள்ளை தெரிவித்தார்.

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், கொக்குவில் ஸ்ரேசன் சி. சி. பாடசாலை ஆகியவற்றிலும் இந்த இடம் பெயர் சேவை இடம் பெற்றது. [இ—3]

## புனரமைப்பு

காரைநகர், ஜூலை 27

சர்வதேச கெயர் ஸ்தாபனத்தால் அனலைதீவிலுள்ள வேலன்குளம் புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகத்தின் பணிப்புக்கமைய புனரமைப்பு வேலைகளைப் பார்வையிடுவதற்கான குழு ஒன்று அனலைதீவு கிராமசேவகர் பொ. அன்பழகன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. [ஐ-73]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ALL PURPOSE MULTI DIRECTIONAL

KOBE-52



TV/RADIO ANTENNA

பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

(சி/8287)


# வவுனியாவின் மின்சார விநியோகம்

## முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலை

வவுனியா, ஜூலை 27

வவுனியா மாவட்டத்தில் மின்விநியோகம் முற்றாக ஸ்தம்பிக்கும் சூழ்நிலை உருவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டுவைத்துத் தகர்க்கப்படும் மின்மாற்றிகளுக்குப் பதிலாக அந்த இடத்தில் புதிய மின் மாற்றிகளைப் பொருத்த வேண்டாம் என்று படைத்தரப்பு விடுத்துள்ள அறிவிப்பே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது,

வவுனியாவில் மின்மாற்றிகள் தகர்க்கப்படும் சம்பவங்கள் அதிகரித்ததை அடுத்து அவற்றுக்குப் படையினரின் பாதுகாப்பு வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும்—

அந்தத் திட்டத்தால் பலன் கிடைக்காததை அடுத்துப் படைத்தரப்பு புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்றும்—கூறப்பட்டது.

தகர்க்கப்பட்ட மின்மாற்றிகளுக்குப் பதிலாகப் பொருத்தப்பட்ட புதிய மின்மாற்றிகள்கூடப் பின்னர் தகர்க்கப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் இதுவரை தகர்க்கப்பட்ட 20 மின்மாற்றிகளால் ஒரு கோடியே 12 லட்சம் ரூபா மின்சார சபைக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

(இ-16-43)


உ

நீர்வேலி
அருள்மிகு
செல்லக் கதிர்காம சுவாமி கோயில்

ஆடித் திருவோண - கதிர்காம
தீர்த்த உற்சவ விழா

29 07–99 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு விசேட அபிசேக ஆராதனைகளும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் சிறப்பாக நடைபெறும்.

பகல் மகேசுவர பூசை (அன்னதானம்) வழமை போல இடம் பெறும்.

அனைவரும் வருகை தந்து கதிர்காம வேலவன் திருவருள் பெற்றுய்வீர்களாக

''வேலுண்டு வினையில்லை''

விழா உபயகாரர்

(97743)



குரும்பசிட்டி சன்மார்க்க சபை
கல்வி மேம்பாட்டு நிதியம்

குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவையாளர் பிரிவுகளில் நிரந்தரமாக வதிவோர் பின்வரும் புலமைப் பரிசில்களுக்கு தகுதியெனின் விண்ணப்பிக்கவும்.

❖ ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றோர் (1998); 1997 க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழகம் போகத் தகுதியானவர்கள்,

❖ டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான துறைகளில் 1998இல் சித்தியடைந்தோர்.

விண்ணப்ப முடிவு திகதி: 15 – 08 – 1999

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திரு. ம. சபாரத்தினம்.
வங்கியடி
இணுவில் கிழக்கு, இணுவில்.

(67736)



நெஞ்சகலா நினைவுகள்

12ஆம் ஆண்டு 02ஆம் ஆண்டு



திருமதி
பாக்கியலக்ஷ்மி வீரசிங்கம்

தூலம்: 05 – 04 – 1926
சூக்குமம் 27 – 05 – 1987
திதி: 13 – 06 – 1999

அமரர்
சுப்பிரமணியம் வீரசிங்கம்
(முன்னாள் உரிமையாளர்
புவனேஸ்வரி மெடிக்கல் ஸ்ரோர்ஸ்,
யாழ்ப்பாணம்.

04 – 05 – 1916
19 – 07 – 1997
27 – 07 – 1999

உங்கள் பசுமையான நினைவுகளோடு தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

118/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(67742)



5 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 07 – 01 – 1936

மறைவு 21 – 07 – 1994

அமரர்
தம்பு துரைராஜா

திதி: 27-07-1999

எமது உயிரினுமினிய ஐயா!
இப்புவியில் நாமிருக்கும் வரை — உங்கள்
அன்பு முகம் எம்மை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு.

(67686)



சாமியே சரணம் ஐயப்பா!



அனலையம்பதி ஐயனார் தேர்த்திருவிழா



எத்தனை கண்கள் இருந்தாலும் அத்தனை கண்களும் போதாது.

இன்று அனலையம்பதியில் பூரணை புஷ்கலா சமேதராய்

மணிகண்டன் தேரில் ஆரோகணித்து வரும் கண்கொள்ளாக் காட்சியைக்

கண்டு அருள் பெறுவீர்களாக!

மணிகண்டன் தரகு சேவை நிலையம்,
இல: 42/3, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(67738)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் அதிகரிக்கும் சம்பவங்கள்; தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லையா?

25-07-99 உதயனில் 'சூரியகாந்தி' ஞாயிறு சிறப்பம்சம் பகுதியில் பிரசுரமான வவுனியா வலம் கட்டுரையின் இறுதிப்பகுதி இது.

சிப்பாய்களான குமாரசிங்க, சரத்குமார ஆகிய இருவரும் அன்று அகப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு புலிகள் பின்வாங்கி விடுகின்றனர். இதிற் சரத்குமார அந்த இடத்திலேயே இறந்து போக, குமாரசிங்க மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே இறந்து போகிறார்.

இதனால் ஆத்திரமடைந்த சன்விலேஜ் இராணுவத்தினர் கிரிப்பகுதிக்குள்புகுந்து சரமாரியாகச் சுட்டபடி அட்டகாசம் செய்கின்றனர். கையில் கிடைத்தவர்களை நையப்புடைக்கின்றனர். கண்ணில் பட்டவர்கள் மீது துப்பாக்கியால் சுடுகின்றனர். வீடுகள், மினித்தியேட்டர்களை எரித்துத் தள்ளுகின்றனர் 7 பேர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் மன்னார் மாவட்ட கல்வித்திணைகளத்தில்கடமையாற்றும் லோரன்ஸும் [48வயது] ஒருவர்.

இவ்வாறாக நகரப் புறத்தில் வெட்டியும், குத்தியும், சுட்டும் பலர் கொல்லப்பட— கற்பழித்தும் நையப்புடைக்கப்பட்டும் பலர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்க —

இன்னொரு புறத்தில் சண்டை நடைபெறும் பகுதிகளில் பலர் கொன்று குவிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஷெல் தாக்குதல்களாலும், துப்பாக்கிப் பிரயோகத்தாலும் கொல்லப்பட்ட இவர்கள் புலிகள் என்று முத்திரை குத்தப்பட்டு புலிகளும் உரிமை கோராமல் உறவினர்களிடமும் கொடுக்கப்படாமல் அநாதைப் பிணங்களாக புதைக்கப்படுவது தான் மகா கொடூரம்.

**அப்பாவிகளின் சடலங்கள்**

கடந்த ஜூன் 26 ஆம் திகதி நடத்தப்பட்ட போர்க்கோஷம் — 4 நடவடிக்கையின்2 ஆம் பகுதியில் பாப்பாமோட்டை, பெரிய மடு ஆகிய பகுதிகளில் நடந்த மோதல்களில் கொல்லப்பட்ட 37 விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்கள் எனக் கூறப்பட்டு 9 ஆண்களின் சடலங்களும் 28 பெண்களின் சடலங்களும் மன்னார் வைத்தியசாலையில் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்டன. அந்தச் சடலங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் முயற்சி எடுத்தனர். ஆயினும் விடுதலைப் புலிகள் அவை தங்களுடையவை அல்ல என்று பொறுப்பேற்க மறுத்து விட்டனர். அவை மோதலில் இடையில் அகப்பட்டுக் கொண்ட அப்பாவி மக்களுடையசடலங்கள் என்றுஅப்போதேரெலோ இயக்கம் குற்றஞ்சாட்டி இருந்தது. ஆனாலும் சடலங்கள் அடையாளம் காணப்படாததால் அரச செலவில் அடக்கம் செய்ய பட்டன.

அந்தச் சடலங்களைப் பார்வையிட்டு தனித்தனியாக அவதானக் குறிப்பெடுத்த மன்னார் மாவட்ட பதில் நீதிவான் நிக்கலஸ் செல்டானோ இந்த சடலங்களில் 6 சடலங்கள் இராணுவச் சீருடைக்கு ஒத்த சீருடைகளுடன் காணப்பட்டன என்று தெரிவித்தார்.

அத்துடன்சீருடைகள் சேதமுறாமலும், அவசரமாகஅணிவிக்கப்பட்டன போன்றும் காணப்படுவதால் அந்த சடலங்களில் இருந்த ஆடைகள் களையப்பட்டு கொல்லப்பட்ட பின்னர் சீருடைகள் சடலங்களுக்கு அணிவிக்கப்பட்டிருக்க வேண்டுமென்ற சந்தேகம் ஏற்படுகிறது என்றும்அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதில் நீதிவானின் அறிக்கையும் புலிகளின் மறுப்பும் அந்தச்சடலங்கள்எவருடையவை என்ற சந்தேகத்தைத் தீர்த்து வைக்கின்ற போதிலும் சடலங்கள் பற்றி மாவட்ட வைத்திய அதிகாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கையில் 37 சடலங்களும் இராணுவச் சீருடை காக்கி உடை மற்றும் கொமாண்டோ உடைகளை அணிந்திருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதில் நீதிவானின் அறிக்கைக்கு முரணாக மன்னார் மாவட்ட வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்ட அறிக்கையானது பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பதுடன் இராணுவத்தினரின் அடாவடித்தனங்களுக்கு அதிகாரிகளும் துணைபோவதைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறது.

இது மட்டுமல்லாது அந்தச் சடலங்கள் புலிகளுடையவை அல்ல என்பதை நிரூபிப்பது போன்று புதைக்கப்பட்ட சடலங்களில்ஒன்று தமது வீரருடையது எனச் சொல்லி இராணுவத்தினர் தோண்டி எடுத்துச் சென்றுள்ளனர்,

இவையெல்லாம் வெளியே தெரிந்தவை. ஆனால் ஏகப்பட்ட சம்பவங்கள் வெளிக்கொணரப்படாமலேயே மூடி மறைக்கப்பட்டு விடுகின்றன. மன்னார்ப் பகுதி மக்களுக்கு ஆதரவாக எவரும் குரல் கொடுக்காத நிலையில் பயங்கரமான சம்பவங்களெல்லாம் பதுக்கப்படுவதும் மன்னார்ப் பகுதியில் எது செய்தாலும் எவரும் கேட்க மாட்டார்கள் என்ற நிலையில் இவ்வாறான சம்பவங்கள் அதிகரிக்கக் காரணமாகி விடுகிறது.

தற்போது மன்னார்ப் பகுதிக்குப் புதிய இராணுவப் பொறுப்பாளராகப் பிரிகேடியர் குலதுங்க பதவியேற்றுள்ளார். இவர் எதனையும் கவனமாகக்கையாள்பவர் என்று சொல்லப்படுகிறது. கடந்த19 ஆம் திகதிசண்விலேஜில்நடந்த பொதுமக்களின் மீதான தாக்குதல் பற்றி அறிந்த அவர் தாக்குதலில் ஈடுபட்ட இராணுவ வீரர்களில் மூவரைக் கைது செய்யவும் உத்தரவிட்டிருந்தார். சம்பவம் நடந்ததுக்கு மறுநாள் தான் அவர் மன்னார் மாவட்டத்தில் கடமைகளைப் பொறுப்பேற்க இருந்தார். தான் பதவியேற்கும் வேளையில் அவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றது அவரை மிகவும் பாதித்திருந்ததாக அவருடன் கூடச் சென்று வந்த அரச அதிகாரிகள் தெரிவித்தனர். அவரது அதிகாரத்தின் கீழ் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற இடமளிக்கமாட்டார் எனப் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வாறான சந்தர்ப்பத்தில் தட்டிக் கேட்க மன்னார் ஆயர் இராயப்பு யோசப் தப்புச் செய்தவர்கள் தப்பித்து விடாமல் தண்டனை வழங்க மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் ஆகியோர் இருக்கின்ற நிலையில் இனிமேலும் இவ்வாறான செயல்கள் நடைபெறாது என்ற நம்பிக்கையில் அந்தச் சின்னத் தீவு இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

(முற்றும்)

# உதயன்

## அணுகுமுறையும் மனப்போக்கும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வழங்கப்பட்டு வந்த இடம் பெயர்ந்தோர் நிவாரணம் நிறுத்தப்பட்டதால் எல்லோரையும் விட வலிகாமம் வடக்கு மக்களே பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அப்பகுதியின் புனர்வாழ்வுக் கழகம் ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் சுட்டிக் காட்டியுள்ளது.

வலிகாமம் வடக்கு மக்களில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கப்படாததால் அவர்கள் நாடோடிகளாகத் திரிகிறார்கள் என்றும் —

அவர்களது பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாலேயே அவர்கள் தமது சொந்த இடத்தில், விரும்பும் இடத்தில் குடி வாழும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது என்றும்— அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

வலிகாமம் மக்களின் குடி வாழும் உரிமை மட்டுமன்றி தொழில் செய்யும் உரிமையும் மறுக்கப்பட்டிருக்கிறது. மக்களின் அடிப்படை உரிமைகளில் முதன்மையான இந்த இரண்டும் வலி. வடக்கு மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டிருப்பது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும்.

ஆனால் அரசு இந்த மக்களுக்கு குடியிருக்கவோ, வேலை வாய்ப்புப் பெறவோ மாற்று வசதி எதனையும் செய்ய நினைத்ததும் இல்லை. ஆனால் வழங்கி வந்த உலர் உணவு நிவாரணத்தையும் நிறுத்த முடிவு செய்துவிட்டது.

தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட எந்த விடயத்திலும் எதனையும் சரிவர ஆராயாமல் எழுந்தமானத்தில் நினைத்ததை முடிக்கலாம் என்ற மனப்போக்கு அரசிடம் வளர்ந்திருப்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

வலிகாமம் மக்களே வாருங்கள், வந்து உங்கள் சொந்த இடங்களில் — வீடுகளில் — (மீளக்) குடியமருங்கள் என்று மூன்றரை வருடங்களுக்கு முன்னர் அன்பொழுக அழைத்த அரசு, இப்போது அவர்களைப் பட்டினி போட்டு சாகடிக்க முயற்சிக்கிறதா? போரைத்தொடர்ந்து நடத்துவதற்குப் பணம் இருக்கிறது; நிவாரணம் வழங்கி தமிழர்களை வாழவிடுவதற்குத் தான் பணம் இல்லையா?

கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக போக்குவரத்துப் பாதையை மூடி வன்னி வாழ் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பாது அவற்றை மக்களுக்கு எதிரான ஆயுதங்களாகப் பயன்படுத்துவதும் மேலே குறிப்பிட்ட ''எதனையும் செய்யலாம்'' என்ற அணுகுமுறையின்—மனப்போக்கின்—வெளிப்பாடே.

வன்னிக்கான பாதை திறப்பு விடயத்தில் அறிக்கைப் போர் நடத்துவதால் மக்களைப் பட்டினிச் சாவிலிருந்தும், நோய்க்குச் சிகிச்சை இல்லாத சாவிலிருந்தும் காப்பாற்ற முடியாது. இதனை உணர்ந்தாவது இரு தரப்புகளும் கடும் போக்கைக் கைவிட்டு சிறிதளவாவது விட்டுக் கொடுத்து மக்களைச் சாவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதே உடனடித் தேவை.

குறிப்பாக அரசாங்கம் இந்த விடயத்தில் ஏனைய விடயங்களைப் போன்று தாமதம் செய்யும் தந்திரத்தைக் கடைப்பிடிக்கக் கூடாது. பாதையை மூடியது படையினரே. ஆகவே அதனை விரைவில் திறக்கவேண்டிய பொறுப்பும் அரசையே முதலில் சாரும். மனிதநேயத்துடன் கையாளப்பட வேண்டிய விடயங்களை அந்த வகைப்படுத்திச் செயற்படுவதே நல்லது

## முகாமில் சுகாதாரச் சீர்கேடு

வலிகாமம்தெற்கு, ஜூலை27

நவாலி வடக்கில் அமைந்துள்ள புலவர் முகாமில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்றன என்று கூறப்படுகிறது.

இந்த முகாமில் உள்ளவர்களின் பாவனைக்கென அமைக்கப்பட்ட மலசல கூடங்கள் பழுதடைந்து காணப்படுகின்றன. இதனால் மலசலங்களுடன் கூடிய அசுத்தநீர் முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளில் காணப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டில் தெல்லிப்பழையிலிருந்து இடம் பெயர்ந்த 75 குடும்பங்கள் இந்த முகாமில் வாழ்ந்து வருகின்றன.

மேற்படி முகாம் வீதியை இணைக்கும் சந்தியில் பள்ளமான நிலம் காணப்படுவதால் அசுத்த நீர் அங்கு தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது.

இந்தப் பள்ளமான நிலத்துக்கு நீர் வடிந்தோடக் கூடிய நீர்ப்போக்கி ஒன்றினை அமைத்துத் தருமாறும் —

நீண்டகாலமாகப் பழுதடைந்த நிலையில் உள்ள மலசலகூடங்களைப் புனரமைப்புச் செய்து தருமாறும்— மேற்படி முகாமில் வாழும் குடும்பங்கள் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையினரிடம் கோரியுள்ளன.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் அகவொளி நிலையத்தினரால் ''குடும்பத்தில் முரண்பாடு'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல்3. 30 மணிக்கு அகவொளிநிலையத்தில் நிலைய இயக்குநர் அருட்பணி எஸ். ஜே. இராஜநாயகம் தலைமையில் நடைபெறும்.

இதில் வீடியோப் படக் காட்சியும் உரையாடலும் இடம்பெறும்.

(இ-ரி)

## நாளை

ஆடி 12
புதன்கிழமை
திதி: பூரணை
பிற்பகல் 5.31 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
பிற்பகல் 5.55 வரை.
பூரணை விரதம்
சுபநேரம்: 4.32 - 6.02
ராகுகாலம்: 12.02 - 1.32
(பகலுக்கும் [illegible]
பழைய [illegible])

## உதயவாக்கு

நன்மையைப் போலவே தீமையிலிருந்தும் மனிதன் பெரும் பாடங்களைக் கற்றுக் [illegible]

— [illegible]நந்தர்

## காங்கேசன்துறை மாவட்ட சாரணர் பாசறை விழா

வலிகாமம் தெற்கு, ஜூலை 27

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் 19 ஆவது வருடாந்த சாரணர் பாசறை விழாவும், குருளைச் சாரணர் வெளிக்கள நாளும் அண்மையில் சிறப்பாக நடந்தேறின.

குருளைச் சாரணர் வெளிக்கள நாள் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 218 குருளைச் சாரணர்களும் 23 குருளைச் சாரணர் தலைவர்களும் பங்கு பற்றினர்.

இவர்களுக்கிடையே பாட்டு, குழுப் பதிவேடுகள் களிப்பூட்டும் நிகழ்வுகள், மந்தை மூலை, கைவேலை அணி நடை, சிறந்த குருளைச் சாரணர், சிறந்த குருளைச் சாரணர் தலைவர் போட்டிகள் இடம் பெற்றன.

சாரணர் பாசறை விழா இம் மாதம் 9 ஆம் திகதியில் இருந்து 11 ஆம் திகதி வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

பாசறைப் பதியாக ந. சௌந்தரராசனும், உப பாசறைப் பதியாக க. தர்மேசனும், குருளைச் சாரணர் உப பாசறைப் பதியாக திருமதி ப. கைலாசநாதனும் கடமையாற்றினர்.

இந்தப் பாசறை விழாவில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக வருகை தந்தார்.

வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் திருமதி றெ. இருதயநாதன், அ. தற்பரானந்தன், ஆ. வ. கணேசலிங்கம், சி. செல்லையா க. தனபாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த வைபவத்தில் சிறப்பாக இரு சாரணர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது. மேலும் இரு சாரணர்களுக்கு பிரதம ஆணையாளர் விருதும், 15 சாரணர்களுக்கு மாவட்ட ஆணையாளர் கட்டிழையும் வழங்கப்பட்டன.

ஆரம்ப நாள் வைபவத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலனும், இறுதி நாள் வைபவத்துக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பாசறை விழாவில் 721 சாரணர்களும் 36 சாரணர் தலைவர்களும் பங்கு கொண்டனர்.

தீப் பாசறை நிகழ்ச்சி, சமூக சேவை, நிலைக் காட்சி, அணிநடை, மைதானக் காட்சி, பாசறைப் பரிசோதனை என்பவற்றில் போட்டிகளும் இடம்பெற்றன, நா. போஜன் சகல போட்டிகளையும் ஒழுங்கு படுத்தி நடத்தினார்.

(இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறையில்

# மருத்துவபீட மாணவர்கள் ஏற்பாட்டில் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். மருத்துவபீட மாணவர்களின் ஏற்பாட்டில் நாவாந்துறை கிராமத்தில் நீரிழிவு, இதய இரத்த அழுத்தம், பொதுமருத்துவம் ஆகியன தொடர்பான பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

நாவாந்துறை புனித நிக்கலஸ் சனசமூக நிலையத்தில் டாக்டர் சுகுமாரின் உதவியுடன் மருத்துவபீட மாணவர்கள் நடத்திய இந்த முகாமில் சுமார் 250 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பரிசோதனைகளின் பின்னர் யாழ். றோட்டறிக் கழகத்தின் உதவியுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட மருந்துகள் நோயாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து பிற்பகல் புனித நிக்கலஸ் தேவாலய முன்றலில் 'பால்யவயது விவாகத்தால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மருத்துவபீட மாணவர்களால் நடத்தப்பட்டது.

இதில் இளைஞர், யுவதிகள் மட்டுமன்றி பெரியவர்களும் பங்குபற்றினர்

(உ-3)

# விழா நடத்துவதை விட கற்பித்தலே அவசியம்

## ஆசிரியர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 27

''பாடசாலைகளில் விழாக்கள் நடத்துவதைத் தவிர்த்து மாணவர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட வேண்டும்''

மேற்கண்டவாறு யாழ். கல்வித் திணைக்கள இணைப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை அதிபர், ஆசிரியர்களைக் கேட்டுள்ளார்.

''கடந்த தவணைகளில் தமிழ்த் தினப்போட்டிகள், உடற் பயிற்சிப் போட்டிகள் காரணமாக மாணவர்களின் கற்பித்தல் பணிகள் பாதிக்கப்பட்டிருந்தன.

''ஆகவே 3 ஆம் தவணையில் மாணவர்களுக்கு முழுமையான கற்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

''இன்று எமது மக்கள் படும் இன்னல்களுக்கு மத்தியில் விழாக்கள் மற்றும் களியாட்ட நிகழ்வுகளை நடத்த வேண்டுமா என்பதைசகலரும் சிந்திக்க வேண்டும். எனவே இந்த நிகழ்வுகளை நிறுத்திவிட்டு மாணவர்களின்கற்பித்தல்செயற்பாடுகளில் முழுமையாக அதிபர்கள், ஆசிரியர்கள் ஈடுபட வேண்டும்'' இப்படி அவர் கோரியுள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## Nagalingam Balendra Nagalingam

Retired Teacher St. Benedicts College Colombo, beloved husband of Kamala (nee Benjamin) affectionate father of Shalin and Minoli, Loving son of late Mr. & Mrs. P. Nagalingam and Son-in-law of late Mr. & Mrs. M. Benjamin, Father-in-law of Philip Saverimuthu and Grandfather of Brenden passed away in Colombo on 25-07-99. Friends and relations please accept this intimation.

Informant:
J. J. C. Segarajasinghe,
57, Vembadi Road,
Jaffna.

161/30C, Hultsdorf Gardens,
Colombo – 12.

[67739]

## சாமுவேல் பொன்னையா அழகரட்ணம்

(இளைப்பாறிய அதிபர்)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வேப்பங்குளம் வவுனியாவில் வசித்தவருமான சாமுவேல் பொன்னையா அழகரட்ணம் வேப்பங்குளம் வவுனியாவில் 25 - 07 - 99 இல் காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவரான இரத்தினம்மாவின் அன்புக் கணவரும் திருமதி ப. சந்திராதேவி (அதிபர் நவீல்ட் பாடசாலை கைதடி), திருமதி ச. மனோகராதேவி (புதுக்குடியிருப்பு) திருமதி இ. வசந்தாதேவி, காலஞ்சென்ற குணரட்ணம், குணசீலன் (ஜேர்மனி), திருமதி ச. நிர்மலாதேவி (கொழும்பு) ஆகியோரின் அருமைத் தந்தையும், பத்மபாலன் (சீமா சில்க்) சந்திரசேகரம் (ஆசிரியர்), இராசகுலசிங்கம் (ஜீவ்ஸ் ஸ்ருடியோ), சற்குணராஜா (தொழில் நுட்ப உத்தியோகத்தர்) திருமதி அஸ்ரிட், திருமதி சறோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், இளைப்பாறிய ஆசிரியை திருமதி நேசம்மா இராமலிங்கத்தின் அன்புச் சகோதரரும், ப. கீத்தா, ப. லோஜா, காலஞ்சென்ற காந்திமதி, கலைச்செல்வி (ஆசிரியர்), திலீபன். சுகந்தி, சோபனா, ஜீவன்ராஜ் [M S.F வவுனியா], டயானா [யாழ். இந்துமகளிர்கல்லூரி]. ஏற்றியன், [கொழும்பு], அசோக்குமார் [இங்கிலாந்து], தர்மேந்திரன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் லனியின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [27-07-99] செவ்வாய்க்கிழமை வவுனியாவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
இ. இராஜகுலசிங்கம்
(உரிமையாளர் ஜீவ்ஸ் ஸ்ருடியோ)

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

[67739]

# நூல் வெளியீட்டு விழா

**செல்லையா மெற்றாஸ்மயில்**

எழுதிய

1999 ஆம் ஆண்டில் வாழ்ந்துகொண்டிருக்கும்

# இசை நாடக - கூத்து மூத்த கலைஞர் வரலாறு

(35 கலைஞர்களின் கலை வாழ்வு)

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் நடைபெறவுள்ளது.**

இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ். பல்கலைக்கழகம்.

காலம்: 1999 - 07 – 28 புதன்கிழமை காலை 10 மணி (புதிய நேரம்)

தலைவர்: சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை,
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

## நிகழ்ச்சி நிரல்

★ மங்கள விளக்கேற்றல்: பிரதேச செயலர்கள்.

★ தமிழ் வாழ்த்து: பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.

★ வரவேற்புரை: வைத்திய கலாநிதி வை, தியாகராசா.
(தலைவர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்)

★ வாழ்த்துரைகள்:
- ★ உயர்திரு, க. சண்முகநாதன் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.)
- ★ உயர்திரு. து. வைத்திலிங்கம். (மேலதிக அரசாங்கஅதிபர், யாழ்ப்பாணம் )
- ★ கலாநிதி. ச. நா. தணிகாசலம்பிள்ளை. (கல்விப்பணிப்பாளர், யாழ். கல்வி வலயம், யாழ். மாவட்ட கல்வி நிர்வாக இணைப்பாளர்)
- ★ உயர்திரு. பொ. பாலசிங்கம். (ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்
- ★ உயர்திரு. ப, விக்னேஸ்வரன். (கல்விப்பணிப்பாளர், தீவக கல்வி வலயம்))
- ★ பேராசிரியர் சு. மோகனதாஸ். (தலைவர், விவசாய இரசாயனவியற்றுறை, விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
- ★ கலாநிதி காரை.சுந்தரம்பிள்ளை.
- ★ கலாநிதி க. குணராசா. (செங்கை ஆழியான்)

★ தலைமையுரை:

★ வெளியீட்டுரை:
- ★ பேராசிரியர் செ, பாலச்சந்திரன். (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

★ முதற்பிரதி பெறுபவர்:
- ★ பேராசிரியர் இரா. சிவச்சந்திரன். (தலைவர், புவியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)

★ கௌரவப் பிரதி பெறுபவர்:
- ★ திரு. க. இராஜதுரை. (அதிபர். யாழ் மத்திய கல்லூரி)
- ★ வண.பிதா பி. எம். இம்மானுவேல். (பங்குத்தந்தை, நாவாந்துறை)

★ சிறப்புப் பிரதிகள் வழங்கல்

★ ஆய்வுரை
- ★ பேராசிரியர் அ. சண்முகதாஸ் (பீடாதிபதி, உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

★ மதிப்புரை, திருமதி செ. நாச்சியார்
(தலைவர், நுண்கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

★ நயப்புரை: உயர்திரு. ரி. வி. கிருஷ்ணசாமி
(உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

★ பதிலுரை: நூலாசிரியர் செ. மெற்றாஸ்மயில்

★ நன்றியுரை; வ. சி. செல்வராசா - பொருளாளர்
(பாரம் பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்)

கலைப் பணியில் ஈடுபடும் நூலாசிரியருக்கு பல விதத்தில் பலரும் உதவியுள்ளார்கள். அவர்கள் பலருடைய முகவரிகள் சரியாகத் தெரியாததினாலும் குறுகிய கால இடைவெளியாலும் பலருக்குத் தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியவில்லை. எனவே இப்பத்திரிகை மூலமான அழைப்பை நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**செ. மெற்றாஸ்மயில்**
நூலாசிரியரும், செயலாளரும்.
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

வாழ்த்துகின்றார்கள்:

**மெடி எயிட்ஸ் நிறுவனம்**
நல்லூர்.

**எடிசன் அக்கடமி**
யாழ்ப்பாணம் - நல்லூர்.

**இந்திரா கபே**
நெல்லியடி - கரவெட்டி.

(சி) 8314

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதிக் கொடுப்பனவு கிடைப்பதில் தாமதத்தை தவிர்ப்பதற்கு முயற்சி

## வெளிக்கள ஊழியர் சங்கம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்; ஜூலை 27

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஊடாகக் காப்புறுதி பெற்றவர்களுக்கான கொடுப்பனவுகளை தாமதமின்றி வழங்குவதற்காக கொழும்பு தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வெளிக்கள ஊழியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன வெளிக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் யாழ். கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் யாழ். பஸ்தியன் உணவு விடுதியில் இடம்பெற்றது. அக்கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

யாழ். பிராந்திய வெளிக்கள ஊழியர்களுக்கு கூட்டுத்தாபனம் வழங்க வேண்டிய சலுகைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இச்சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

1999 — 2000 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது. தலைவராக ச. சண்முகராஜாவும், உப தலைவர்களாக எஸ் சிறிஸ்கந்தசெல்வன், எஸ். என். கதிரவேலு ஆகியோரும் செயலாளராக என். சிவநாதனும், உப செயலாளராக கே. நடராசாவும், பொருளாளராக ரி. கனகசபையும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஐ)

## பொதுநல அமைப்பு நாடுகளின்

# பல்கலைக்கழக வேந்தர்கள் கண்டியில் ஒன்றுகூடல்

கொழும்பு, ஜூலை 27

பொதுநல அமைப்பு நாடுகளின் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் சம்மேளனத்தின் ஒன்றுகூடல் நேற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஹெட்டியாராச்சி மண்டபத்தில் அந்தப் பல்கலைக்கழகத் துணைவேந்தரும் சம்மேளனத்தின் தற்போதைய தலைவருமான வெஸ்லி குணவர்த்தனா தலைமையில் ஆரம்பமானது.

16 நாடுகளின் பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சுமார் அறுபது துணைவேந்தர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

நேற்றைய நிகழ்வுகளில் சம்மேளனத்தின் செயலாளர் பேராசிரியர் மைக்கல் கிப்பன் துணைப் பொதுச் செயலாளர் டொறற்றி அம்மையார் சம்மேளனத்தின் கல்வி முகாமைத்துவப் பிரிவு இயக்குநர் ஜோன பில்ட்டன, சம்மேளனத்தின் அதிகாரி ஹென்டிங்டன் வில்லியம் ஆகியோர் உரையாற்றினர்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தொகுப்புரையும் நன்றியுரையும் நிகழ்த்தினார்.

புதன்கிழமையும், வியாழக்கிழமையும் துணைவேந்தர்கள் அனைவரும் கந்தளமே என்ற இடத்தில் கூடி பல்கலைக்கழகங்களுக்கு இடையில் ''தொடர்புகளும் பங்களிப்பும்'' குறித்தும் விரிவாக ஆராயவுள்ளார்கள்.

(உ)

# மின் கட்டணம் குறித்து மக்கள் வங்கி விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

குடாநாட்டில் உள்ள மக்கள் மின் கட்டணம் செலுத்துவதில் எதிர்நோக்கும் நெருக்கடி தொடர்பாக மக்கள் வங்கி விளக்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

மின் கட்டணம் செலுத்துவதில் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடி தொடர்பாக கடந்த 23 ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி தொடர்பாக மக்கள் வங்கி அனுப்பியுள்ள விளக்கம் வருமாறு:-

''இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும் மின்சாரப் பட்டியலின் பின்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள், நிபந்தனைகளின் பிரகாரம் மின்கட்டணங்களைத் தபால் அலுவலகங்கள், உப-தபால் அலுவலகங்கள் மற்றும் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனைத்துக் கிளைகளிலும் 'செலுத்தலாம்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் மின் பாவனையாளர்களில் மிகப் பெரும் பாலானோர். மின் கட்டணங்களை மக்கள் வங்கிக் கிளைகளிலேயே செலுத்திவருவதனால் தான் இந்த நெருக்கடி ஏற்படுகின்றது.

வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவை அளிப்பதே மக்கள் வங்கியின் குறிக்கோளாகையால், இதில் எமக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் நெருக்கடியைத் தவிர்ப்பது சாத்தியமற்ற ஒரு செயலாகும். எனவே, வாடிக்கையாளர்கள் எம்முடன் ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றோம். —என்றுள்ளது.

## வன்னி பாதை திறப்பு விடயம்

# நீதி சமாதான ஆணைக்குழு ஜனாதிபதிக்கு நேற்று மகஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வன்னிக்கான புதிய போக்குவரத்துப் பாதையைத் திறந்து மக்களின் நிலைமையைச் சீர்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லையேல் அது தமிழ் மக்களின் பரிதாப நிலை பற்றிப் பாரபட்சமாயிருக்கும் கடும் மனதின் பிரதிபலிப்பென்றே கொள்ளப்படும்.

யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வன்னி வாழ் மக்களின் அவல நிலை பற்றி எமது ஆழ்ந்த மனக்குழப்பத்தைத் தங்களுக்கு இத்தால் தெரிவிக்க விரும்புகின்றோம்.

வன்னியில் வாடிவதங்கும் பச்சிளம்பாலர்கள், சிறுவர்கள்,வயோதிபர்கள். நோயாளிகள் ஆகியோரைத் தங்கள் மனக்கண் முன் சற்று நிறுத்திப் பார்க்குமாறு கோருகின்றோம்.

அவர்கள் ஏற்கனவே அனுபவிக்கும் துன்ப துயரங்களுக்கோ அளவேயில்லை. அது போதாதென்றாற்போல் இப்போது உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் சில வாரங்களாகத் தடைப்பட்டுள்ளன. இந்நிலையில் இன்னும் எவ்வளவு காலம் அவர்கள் பட்டினிச்சாவின் பிடியில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியுமோ!

இக்கொடிய நிலையைச் சீர்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லையேல் அது தமிழ் மக்களின் பரிதாப நிலை பற்றிப் பாரபட்சமாயிருக்கும் கடும் மனதின் பிரதிபலிப்பென்றே கொள்ளப்படும்.

எமக்கும் அரச அதிகாரிகளுக்குமிடையே உள்ள நம்பிக்கையீனம் என்ற அகழி மேலும் ஆழமாகிவிடும்.

எனவே வன்னிக்கு உணவு, மருந்துப்பொருள்கள் அனுப்புவதற்கு உடனடி நடவடிக்கை எடுத்து துரிதமாகச் செயற்படும்படி தங்களை அன்புடன் கோருகின்றோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சமுதாய கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ். கல்விவலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்டுவரும் எழுத்தறிவூட்டல் வகுப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகமும் சமுதாய கல்விக் கருத்தரங்கும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

புத்தூர் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய அதிபர் நா. சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கம் பிரதம விருந்தினராகவும் முறைசாராக் கல்விப் பிரிவு செயற்திட்ட அலுவலர் எஸ். சிவானந்தன் மற்றும் முறைசாராக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி இ. சண்முகரத்தினம் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கோப்பாய் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(இ-7)

# பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 27

திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலையத்தின் கலைமகள் பாலர் பாடசாலையின் 25 ஆவது ஆண்டு வருடாந்த விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய முன்றலில் திருமதி நாகபூஷணி சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக முன்பள்ளி முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வே. யோகராசா கலந்துகொள்வார்.

(ஐ)

# கிருபைராஜா மறைவுக்கு ஈ.பி.டி.பி. அனுதாபம்

எந்த இடத்திலும் துணிவுடன் பேசக்கூடிய ஒரு பெருமகனை நாம் இன்று இழந்து நிற்கின்றோம்.

இவ்வாறு கடந்த வெள்ளியன்று காலமான புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜாவின் மறைவு குறித்து ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் செ. கிருபைராஜா அவர்கள் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்த செய்தி எமக்கு ஆழ்ந்த கவலையைத் தந்துள்ளது.

அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்துக்கும் அவரது அமைப்பு உறுப்பினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்— என்று அவர் தனது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஈ.பி.டி.பியில் இருந்து விலகிய இளைஞர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஈ.பி.டி.பி கட்சியிலிருந்து விலகிவந்ததாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரை யாழ் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் நேற்றுப் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து விலகி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் சரணடைந்ததாகக் கூறப்படும் இந்த இளைஞரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு யாழ். பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த பவுலிஸ் சற்குணம் என்ற இந்த இளைஞரை ஓகஸ்ட் 9 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைத்திருக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் இவரை இவரது சொந்த இடத்துக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபருக்கு உத்தரவிட்டார்.

[உ-5-ரி]

# முன்னாள் மேயரின் நினைவு தினம்

முன்னாள் யாழ். மாநகர மேயரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட முன்னாள் அமைப்பாளருமான அமரர் அ. த. துரையப்பாவின் 25 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரின் சமாதிக்கு மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மலர் அஞ்சலியைத் தொடர்ந்து யாழ். வேம்படி வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்தலும் இரங்கல் கூட்டமும் நடைபெறும் என்று கட்சியின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளரும் செயலாளருமான ரி. தேவகுல நாயகம் அறிவித்துள்ளார்.

# அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்)

வடக்கு—கிழக்கு மாகாண ஆசிரியர்கள், அதிபர்களுக்கான இடைக்கால கொடுப்பனவு மற்றும் சம்பள நிலுவையை வழங்குவதற்கென திறைசேரியால் வழங்கப்பட்ட ரூபா 150 மில்லியன் எவ்வாறு பகிரப்படவேண்டும் என கல்வி அமைச்சரின் தலைமையில் அண்மையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பிரதி அமைச்சரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வீரசிங்க மற்றும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ் தேவானந்தா (பா. உ.), வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிநிதிகள், அம்பாறை கல்வி வலயத்தில் அண்மையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள், தமிழ் ஆசிரியர் சங்க பிரதிநிதி ஆகியோர் பங்குபற்றினர்.

இக்கூட்டத்தில் அம்பாறை கல்வி மாவட்டத்திலுள்ள. தெய்யத்தகண்டி. மகாஓயா தவிர்ந்த அம்பாறை வலய ஆசிரியர்கள், அதிபர்களுக்கு ஏனைய அதிபர்கள் ஆசிரியர்களை விட சிறிது கூடிய காலத்திற்கான கொடுப்பனவு வழங்குவதெனவும், வடக்குக் கிழக்கிலுள்ள ஏனைய அதிபர்கள் ஆசிரியர்களிற்கு இக்கொடுப்பனவு சமமான அடிப்படையில் வழங்குவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

இம்முடிவை செயற்படுத்துவதன் மூலம் அம்பாறை கல்வி வலய அதிபர்கள், ஆசிரியர்களுக்கு 28 மில்லியனும். வடக்குக் கிழக்கின் ஏனைய அதிபர்கள், ஆசிரியர்களுக்கு 122 மில்லியனும் பகிர்ந்து அளிக்கப்படும்.


வடக்கு — கிழக்கு மாகாணத்தில் போர் நெருக்கடிகளுக்கும், அனர்த்தம் நிலவும் அசாதாரண சூழ்நிலைக்கும் மத்தியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுதல் அத்தியாவசியமானது அதேவேளை மிகுந்த சிரமங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் மத்தியில் கல்வி கற்றுவரும் எமது மாணவ சமுதாயத்தின் வருங்கால நலன்களை முதன்மைப்படுத்தியே ஆசிரியர்கள் சேவையைத் தொடர வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்படுவதில் இனவாத ரீதியிலான அணுகுமுறை கடைப்பிடிக்கப்படுகிறது என்பது மிகைப்படுத்தப்பட்ட ஒரு கூற்று ஆகும். அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள். அதிபர்கள் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து நெருக்கடி கொடுக்க முற்பட்டதன் பெறுபேறாக ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அரசுடனும் திறைசேரியுடனும் தொடர்புகொண்டு வலியுறுத்தியதன் பயனாக இந்த மாகாணத்தில் இடைக்காலக் கொடுப்பனவு வழங்கப்படுவதற்கான ரூபா 150 மில்லியன் பெறப்பட்டது.

இது இந்த மாகாணத்தின் முழு ஆசிரியர்களுக்குமான முழுக் கொடுப்பனவுகளையும் வழங்குவதற்குப் போதுமான தாகவில்லை எனினும் அடுத்த மாதத்தில் மிகுதித் தொகை கிடைக்குமென்ற உத்தரவாதம் பெறப்பட்டதாலும் அடுத்த வாரத்தில் ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. (உ/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டும் தொழிற்சங்க ரீதியிலான உண்ணாவிரதப் போராட்டத்தை தளர்த்த இணக்கம் காணப்பட்டது இதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இனவாத முத்திரை குத்தப்படுவது சற்றேனும் பொருத்தமானதாகத் தென்படவில்லை — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்கலைக்கழக மாணவர்களின் நேற்றைய பேரணியின்போது ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜரை மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். இன்பராஜ் மேலதிக அரச அதிபரிடம் கையளிப்பதையும் — பேரணியை படையினர் தடுத்து நிறுத்தியதை அடுத்து வீதியில் அமைதியாக அமர்ந்திருந்து மறியல் செய்த மாணவர்களில் ஒருபகுதியினரையும் படத்தில்காணலாம். [ஐ-7]

## குரு பூர்ணிமா தினம்

மானிப்பாய், ஜுலை 27

மானிப்பாய் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் குரு பூர்ணிமா தினமும் பரிசு வழங்கல் வைபவமும் நாளை புதன் பிற்பகல் 3-45மணிக்கு விசேட பஜனையுடன் இடம்பெறவுள்ளன.

'குரு' என்னும் பொருள் பற்றி தெல்லிப்பழைமாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி சிவராணி சிவசோதி உரை நிகழ்த்துவார். வட பிராந்திய ச. சா. நிலைய முன்னாள் தலைவரும் ஆலோசகருமான ஸ்ரீ எஸ். விஜயரத்தினம் பரிசுத்தின உரை நிகழ்த்துவார், (ஐ-90)

★ ★ ★

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் குரு பூர்ணிமா விசேடபூஜைவழிபாடு நாளை புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

விசேட பூஜையை அடுத்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் தலைமையில் நூறு மாணவர்களின் கூட்டு வழிபாடு நடைபெற்று அமரர் ஆ. சி. முருகுப்பிள்ளை, மனோரஞ்சிதம் ஆகியோருக்கான ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும். (ஐ-4)


## நன்றியுரை

தந்தையே!
உம் திருமகன் குழந்தை யேசு வழியாக எங்கள் மன்றாட்டுக்களைக் கேட்டருளியதற்காக உமக்கு நன்றி கூறுகின்றோம்.

— அடியாள்

(67759)


## பல்கலை..

(முதலாம் பக்கத் தொடர்)

எதிர்நோக்கியிருக்கும் தமது உடன் பிறப்புகளுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அவசரமாக கிடைக்கச் செய்யுமாறு கோரியே மாணவர்கள் பேரணியை நடத்த முடிவு செய்தனர்.

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களும் நேற்றுக் காலை வளாகத்தில் கூடி வன்னி நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்தனர். அதனைத் தொடர்ந்து தமது கோரிக்கைகள் அடங்கிய — ஜனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட — மகஜர் ஒன்றை ஊர்வலமாக யாழ். செயலகத்துக்கு எடுத்துச் சென்று அங்கு வைத்து யாழ். அரச அதிபரிடம் அதனைக் கையளிப்பது என அவர்கள் தீர்மானித்தனர். அதையடுத்து பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து பேரணியாகப் புறப்பட்டனர்.

பேரணி சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்த நிலையில் நண்பகல் 11.30 மணியளவில் — யாழ். பலாலி வீதியில் கந்தர்மடத்தில் வைத்து வழிமறிக்கப்பட்டது. முன் அனுமதி பெறாததால் பேரணி தொடர்ந்து செல்ல அனுமதிக்க முடியாது எனப் பொலீஸாரும், படையினரும் தெரிவித்தனர்.

தொலைபேசி மூலம் யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் தாங்கள் முன் அனுமதி பெற்றதாக மாணவர்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர். ஆனால்அத்தகைய அறிவித்தல் ஏதும் தங்களுக்கு கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டு பேரணி தொடர்ந்து செல்வதற்கு பொலீஸாரும் படையினரும் தடை விதித்தனர். அதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

தாம் தடுத்து நிறுத்தப்பட்ட இடத்திலேயே — கொதிக்கும் வெயிலுக்கு மத்தியில் — மாணவர்கள் தளராது திரண்டு நின்றனர்.

இதற்கிடையில்—

யாழ்ப்பாணம் அரச அதிபர் க. சண்முகநாதனின் பணிப்புரைப்படி யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் அந்த இடத்துக்கு விரைந்துசென்று மாணவர்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து மகஜரைப் பெற்றுக் கொண்டார். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரனும் அங்கு பிரசன்னமாகியிருந்து மகஜரின் பிரதியைப் பெற்றுக்கொண்டார். அதனை அடுத்து மாணவர்கள்அங்கிருந்து அமைதியாகக் கலைந்து சென்றனர்.

(ஐ-2-7-9-6-15-27-139)

## சுண்டுக்குளி...

(முதலாம் பக்கத் தொடர்)

அவ் வீதி ஊடான போக்குவரத்துச் சிறிது நேரம் தடை செய்யப்பட்டதுடன் தேவாலயத்துக்கு வழிபாட்டுக்கு வந்திருந்தவர்கள் ஆலயத்தின் பின்பகுதியால் பாதுகாப்பாக வெளியே அனுப்பி வைக்கப்பட்டனர். அக்குண்டு பின்னர் இராணுவத்தினரால் பாதுகாப்பாக மீட்டெடுத்துச் செல்லப்பட்டது.

(ஐ-7-9-15)


## நல்ல சமாரியன் ஆலயத்தினால்
நடத்தப்படும்
## சுகமளிக்கும் நற்செய்திக் கூட்டம்

வாருங்கள் வியாதியோடும் வேதனையோடும் மரணத்தோடும் போராடிக்கொண்டிருக்கும் சகோதரனே சகோதரியே எழுந்து வாருங்கள். உன்னத தேவன் உங்களை அழைக்கின்றார். வாருங்கள்; பங்கு பெறுங்கள்; ஆசீர்வாதம் அடையுங்கள்.

என்னைக் கண்டடைகிறவன் ஜீவனைக் கண்டடைகிறான் [நீதி; 8-35] அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் [ஏசா: 53-55] உள்ளத்துக்கு சமாதானத்தைக் கொடுக்கும் பாடல்க்ள், வாழ்வுக்கு விழிப்பைக் கொடுக்கும் இயேசு அற்புதர் நாடகம், சோர்ந்துபோன மக்களுக்குப் பெலத்தைக் கொடுக்கும். தேவ செய்தியும் அன்று நடைபெறும். ஆகவே, இக்கூட்டத்துக்கு அனைத்துத் திருச்சபைகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நடைபெற இருக்கும் இடம்;- உடுவில் கலையரங்க மைதானம். காலம்; 28-7-99 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற இருப்பதால் இக் கூட்டத்தில் அனைத்து மக்களையும் மிகவும் அன்புடன் அழைக்கிறோம்.

(67758)



எமது நேற்றைய வீடியோ CD வெளியீடுகள்!

✖ காதலர்தினம்
✖ சங்கமம்
✖ சுயம்வரம்

புதிய வீடியோ CD கள் விற்பனைக்கு உண்டு.

## வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/8320)



✖ சங்கமம்
✖ காதலர் தினம்

வீடியோ CD பிரதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

## ஆர்க்
## வீடியோ லைபிறறி

[illegible]

(சி/8318)


## சிப்பாய்...

[முதலாம் பக்கத் தொடர்]

குளத்தைச் சேர்ந்த எஸ். ராஜ்குமார் என்பவரே தமிழர் என்றும்—

ஏனையோர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. அவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

தாக்குதலில் பலியான சிப்பாய் பி. எம். எஸ். திஸநாயக்கா என்று அடையாளம் காணப்பட்டது. கொல்லப்பட்ட கான்ஸ்டபிள் எஸ். அழகக்கோன் என்பவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்த 6 பேரில் நால்வர் பொலீஸார் என்றும் இருவர் பொதுமக்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலை நடத்தியோர் தப்பிச்சென்ற ஓட்டோவை படையினரும், பொலீஸாரும் துரத்திச் சென்றபோதும் அது தப்பிச் சென்றுவிட்டதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

அதி உச்ச பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் நடத்தப்பட்ட இந்த துணிகரத் தாக்குதல் வவுனியா பாதுகாப்பு வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது

(ஐ-7-164)

## 3 அதிகாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

பகுதியில் இளம்பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை—

சனிவிலேஜ் பகுதியில் கிரி என்னும் இடத்தில் தாக்குதல் சம்பவம் ஒன்றை அடுத்து அப்பாவிப் பொதுமக்கள் தாக்கப்பட்டமை — போன்ற சம்பவங்களுடன் இந்தப் படையினருக்குத் தொடர்பு இருப்பதாகத் தெரியவந்ததை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி ஒன்றையும் இராணுவப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

(ஐ-7-164)

## முறைப்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்)

பொலீஸ் நிலையத்துக்கு வந்துள்ளனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இந்த அதிகாரிகள் இங்கு தங்கியிருப்பார் என்றும்—

அதற்கு முன்னர் வந்து முறைப்பாடுகளைச் செய்யலாம் என்றும்—

அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்)

பிதமடைந்தன.

இடர்காலக் கொடுப்பனவு மற்றும் சம்பளப்பாக்கி ஆகியவற்றை அம்பாறை மாவட்ட ஆசிரியர்களுக்கு முழுமையாக வழங்க எடுக்கும் நடவடிக்கையை நிறுத்துமாறும்—

வடக்கு—கிழக்கிலுள்ள சகல ஆசிரியர்களுக்கும் பாரபட்சமின்றி சமமாக இந்தக் கொடுப்பனவை வழங்க வேண்டும் என்று கோரியும்—

இந்த மறியல் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களின் பிரதிநிதிகள் பின்னர் வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனாவை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

எனினும் சந்திப்பின்போது ஆளுநரால் உறுதிமொழி எதுவும் வழங்கப்படவில்லை.

இதனால் இன்று காலை 7 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதென ஆசிரியர்கள், அதிபர்கள் தீர்மானித்துள்ளதாக திருமலைச் செய்திகள் தெரிவித்தன. (ஐ-7-5)

## கிருபைராஜா...

(முதலாம் பக்கத் தொடர்)

உள்ள அவரின் தாயாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் நேற்று அவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து யாழ். நகரில் நேற்றுக் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. ஓட்டோக்கள், டாக்ஸிகள் மற்றும் வாடகைக் கார்களிலும் கறுப்புக் கொடிகள் காணப்பட்டன.

இன்று காலை தொடக்கம் மாலை 3 மணிவரைபுளொட் அமைப்பின் தலைமை அலுவலகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

அஞ்சலிக் கூட்டத்தின் பின்னர் மாலை 4 மணிக்கு அன்னாரின் இறுதி ஊர்வலம் ஆஸ்பத்திரி வீதியிலிருந்து ஆரம்பமாகும் என்றும்—

இறுதிக்கிரியைகள் மாலை 5 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெறும் எனவும்—

புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

கிருபைராஜாவின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளை ஒட்டி இன்று யாழ் நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி அவருக்கு அஞ்சலி செலுத்துமாறு புளொட் அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஐ-5-7-15-17-86-139)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-07-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org